

# தென்மொழி

## எதிரிகள் காதில் தெளிவாக ஓது!

ஆண்டெலாம் ஒருசிறு கூட்டம் — இசை
அரங்கெனத் தமிழ்நாட்டில்
நடத்துங்கொண் டாட்டம்
மூண்டெரி கின்ற தீ மூட்டம் — அதில்
முற்றும் அழியும்நம்
முத்தமிழ் ஈட்டம்!

தமிழிலே பாடுதல் மட்டம் — என்று
தாளங்கள் தட்டி
அடிக்கிறார் கொட்டம்
திமிராகச் செயல்படும் திட்டம் — கெடின்
திண்டாடி நிற்குமே
'அவர்களி'ன் வட்டம்!

இன்றமிழ் பாடுதல் தீட்டு — தெய்வ
இசையெனப் படுவது
தெலுங்கிசைப் பாட்டு
என்றவன் சொல்வதைக் கேட்டு — பல்
இளிக்கின்ற தமிழனின்
செவியினைத் தீட்டு!

'துக்கடா' தமிழென்று சொல்வார் — சில
சொற்களைப் பேசியும்
தமிழினைக் கொல்வார்
திக்கெலாம் பெயர்பெற்று வெல்வார் — நாம்
திறமாக நோக்கினால்
எங்கடா செல்வார்?

கனிவான தமிழையல் லாது — மக்கள்
கருத்தொடு கேட்டிட
வேறெது தோது
இனியுங்கள் சீட்டுசெல் லாது — என
எதிரிகள் காதில்
தெளிவாக ஓது!

— இறை

## உள்ளே...


தமிழினம் விழித்தெழுமே!

எழுச்சி கொள்க தமிழ்த் தேசியமே!

அறுபருவத் திருக்கூத்து —கூதிர் காலம்—

போலி ஒருமைப்பாடு!

இம்முறை யாருக்கு ஒப்போலை போடுவது?

மொழியுணர்வால் மீண்டெழுந்த ஒரிசா!

கோயிலமைப்பும் தோன்றியங்களும்!

மொழிப்போர் ஈகியர்க்கு நினைவுமண்டபம் எழுப்புக!



சுவடி - 30
ஓலை - 2
விலை உரு. 4-00

தூய தமிழ் இலக்கியத் திங்களிதழ்

தி.பி. 2029 கும்பம் (பிப்பிரவரி - 1998



# தமிழினம் விழித் தெழுமே!

பிடிக்கட்டும் பிடிக்கட்டும் என்றிருந்தார் — அட
பிடித்தெமை உள்ளேயும் வைத்துவிட்டார்.
அடிக்கட்டும் அடிக்கட்டும் என்றிருப்பார் — எமை
அடிக்கவும் செய்குவார் உயிர்சிதைப்பார்!

எம்மினத் தமிழரின் பதைபதைப்போ — என்றும
இந்நிலை மாறாது! புதுவியப்போ?
அம்மி நகர்ந்தாலும் நகர்ந்துவிடும் — இன
அடிமைகள் என்றென்றும் அசைவதில்லை!

தன்மானம் கெட்டனர்; மதிகெட்டனர் — தம்மின்
தசையாடும் என்பார்கள்! தரங் கெட்டனர்!
என்னானும் ஆகட்டும்! இழப்பாகட்டும் — எமக்(கு)
என்னதனால் வந்ததென் றுடல்வளர்ப்பார்!

தமிழினம் தனித்தனி இனமானது — ஆனால்
தமிழுணர் வென்றுமே வளமானது!
அமிழாது தமிழுணர்வு என்றாகிலும் — முளை
அரும்பாதோ? இனமானம் வளர்ந்திடாதோ?

இருக்கின்ற அத்தனை உருவங்களும் — தமிழ்
இனமில்லை என்றாலும் இருக்கின்றேன் நான்!
உருக்கின்ற உலையினில் எனையிட்டாலும் — நான்
உருக்குலைந் திடல்என்றும் நேர்வதில்லை!

என்போலும் கோடியர் இலையென்றாலும் — மற்றிங்
கிருப்பவர் ஆயிரம் பேரென்றாலும்,
துன்பேதும் மொழி, இனம் பெறுமென்னிலோ — உள்ளம்
துடிதுடித் தெழுந்திடல் உறுதியன்றோ?

ஆயிரம் இலக்கமும் கோடியாகும்-நூறு
ஆண்டுகள் ஆயினும் சளைத்தலில்லை!
வாயுரம் அன்றிது வரலாறன்றோ?-எம்
வழிவழித் தமிழினம் விழித்தெழுமே!

— பாவலரேறு பெருஞ்சித்திரனார்
–29.1.93 (சென்னை – கொடுஞ்சிறையில் (தடா)
இருக்கையில் எழுதப்பெற்றது)



"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

(நிறுவனம் தி.பி.1990 (1959)

நிறுவனர் : பாவலரேறு பெருஞ்சித்திரனார்



# தென்மொழி

மொழி—இனம்—நாடு

**நம்மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!**

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களைவிட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடையமுடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே தமிழக விடுதலைதான் நம் மூழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

ஆசிரியர் : தாமரை பெருஞ்சித்திரனார்

சுவடி.30) தி.பி. உ0உகூ – கும்பம் (பிப்பிரவரி–'98) (ஓலை.2

# எழுச்சி கொள்க தமிழ்த் தேசியமே!

இந்தி யாவின் தலைமை யமைச்சராய்
முந்திய நாளில் இருந்த இராசீவ்
படுகொலை யுற்றது பற்றிய வழக்கில்
நடுவர் தீர்ப்பு நயனிலா அரசியல்
கொடிய சூழ்ச்சியின் வெளிப்பா டெனற்கு
நெடிய ஆராய்ச்சி வேண்டுவ தில்லை!

குற்றஞ் சாட்டப் பட்டோரில் முதன்மையர்
இற்றைநாள் உயிரோடு இல்லை அன்றியும்
அடுத்த நிலையினர் சிலரைப் பிடிக்குட்
படுத்தும் ஆற்றல் எவர்க்குமே இல்லை!
முக்கி முயன்று வலைவீசித் தேடிச்
சிக்கினர் இவரெனக் காவல் துறையினர்
பிடித்துக் கொணர்ந்த இருபத் தறுவர்மேல்
படிக்கப் பட்டன குற்றச் சாட்டுகள்!

சாற்றிய அவற்றைச் சற்றே நோக்கினும்
ஏற்றத் தாழ்வுகள் எவர்க்கும் விளங்கும்

எல்லப்பன் கணக்கெலாம் ஒரேகணக்கு என்றாங்கு
எவ்லோ ரையுமே ஒரே வரம் பிட்டுத்
தூக்குத் தண்டனை யளித்துச் சிலர்தம்
நோக்கம் நிறைவேற்றி வைக்கப்பட் டுள்ளது!

குற்றமே செயினும் அவர்மனந் திருத்தும்
நற்றிறத் ததுவே தண்டனை யல்லால்
சாகடிக் கின்ற கொடுஞ்செயல் சற்றும்
நாகரிகம் அன்றெனுங் கருத்து யாங்கணும்
பர்வி மேலோங்கிப் பன்னாட் டினுமித்
தரமிலாத் தண்டனை யொழிக்கப் படுகையில்
இனிவரு நாளில் குற்றமே யின்றி
நனிசிறப் புடனே நாடு விளங்க
ஏங்கிவர்க்கு இக்கொடுந் தண்டனை என்பது
வீங்கிய அறிவின் நவநீத விளக்கம்!

ஐயுற வில்லாக் குற்றத்துக் கேற்ப
எய்தத் தருவது தண்டனை என்பதா
பின்னாளில் எவருமே பிழையா திருக்க
முன்னரே எவரையோ தூக்கிடு வதுவா?
இக்கொடுந் தீர்ப்பை வழங்கிய தற்கு
வெட்க மின்றியிவ் விளக்கமும் அளிக்கிறான்!

இப்படிச் சட்டம் ஏட்டில் உள்ளதா
அப்படி இருக்குமிது குடியர சென்றால்
அரைத்தூக் கத்தில் அயர்ந்தவனும் எழுந்து
நிரைபல் காட்டி நெடிது சிரிப்பான்!

குற்றச் சாட்டுகள் என்பன வெல்லாம்
முற்றுமெய்ப் பிக்கப் பட்டுவிட் டனவாம்
அரசிய லாளர் தலையீ டேதும்
உரசிப் பார்ப்பினும் ஒருசிறிதும் இல்லையாம்
நேர்த்தி யான தீர்ப்பீ தென்று
கார்த்தி கேயன் கரைகிறான் மேலும்
புலனாய்வுத் துறையினன் புலமிலான் அவனே
நலனுற மக்கள் நம்பிக்கை வென்றதாய்ப்
பலபடப் பேசிப் பதவியும் உயர்ந்தனன்!

ஏவல் துறையாய் அரசுக்கு இயங்கும்
காவல் துறையின் கதைதெரி யாதா?

பொய்யாய்ப் புனைந்து கட்டின எத்தனை
மெய்யை மறைத்த முயற்சிகள் எத்தனை
முன்பின் னாக முரண்படு வனவும்
தன்னுரைக் கெதிராய்த் தானே உளறலும்
இன்னும் இன்னன எத்தனை எத்தனை
அத்திப் பழத்தைப் பிட்டுப் பார்த்தால்
சொத்தை யுள்ளமை வெளியில் தெரியும்!

அல்ல லுற்றார்க் குதவுதல் கடனெனும்
நல்லற வுணர்வு கொண்டவர் தமிழா
பற்பல கட்சியும் ஈழத் தமிழர்க்கு
முற்பட நின்றே உதவிய நாட்டில்
கணவனொடு வந்த விருந்தினர்க்கு ஒருவாய்
உணவு படைத்ததும் மனைவியின் குற்றமா?
வாடகைக்கு வீடு பார்த்துத் தரினுங்
கூடத் தூக்குத் தண்டனை என்பதா?
மதிநல முடையவர் யாவரே யாயினும்
பதினெட்டு அகவை நிரம்பா இளைஞைக்குத்
தூக்குத் தண்டனை தருவரோ இத்தகு
மாக்கொடுஞ் செயலை நவநீதம் செய்துளான்

மக்கள் நம்பிக்கை பொய்க்க வில்லையெனக்
கொக்கரிக் கின்ற கார்த்தி கேயனே
பூடக மாக அனைத்தையும் வைத்து
நாடக மாடிய வழக்குமன் றத்தின்
நடவடிக் கைகளை அறியாத மக்கள்
திடநம் பிக்கையாய் எதனைக் கொண்டனர்?

மூளி உன்போல்வார் உளறல் உரைகளைத்
தாளிகை யெல்லாம் தம்பட்ட மடித்தன
தொலைக்காட் சிகளும் வானொலி தானும்
அலைவரிசை தோறும் கைவரிசை காட்டின
சோவும் சுசாமியும் போலுங் கயவர்கள்
நாவினால் நஞ்சைப் பரப்பினர் யாண்டும்
எதிரிக் கட்சியைக் கைகாட்டி விடுகிற
அதிரடி யான அரசியல் நடந்தது
இவையெலாம் போதா என்று மறுபுறம்
நவையுறு செயின்குழு அறிக்கை வெளியீடு
ஆட்சி கவிழ்க்கப் பட்டதோ டன்றியும்

நீட்சி யான மிரட்டல்கள் வேறு
மாற்றுக் கருத்துகள் மறைக்கப் படுகையில்
ஏற்றவை எவையென யார்க்குத் தெரியும்?

வாய்மையே வெல்லும் என்னும் உண்மையைச்
சாய்வுற மண்ணில் கிடத்திய தீர்ப்பிது!

கட்சி யரசியற் காரர்க ல்லாம்
நெட்டுயிர்த் தொருவாறு நிமிர்ந்தெழுந் தீண்டுத்
தம்பிரான் அருளால் தலைதப் பியதெனும்
நம்பிக்கை பெற்று நடுக்கந் தவிரினும்
மாற்றாருந் தமைப்போல் விடுபடும் நிலைகண்டு
ஆற்றாமை யாலே அரற்று கின்றனர்!

திருப்பெரும் பூதூர் அந்நாள் நிகழ்ச்சிக்கு
ஒருப்பட்ட இராசீவின் உடன்வர லின்றிப்
ஒதுங்கி நழுவிப் பணப்பெட்டி யோடு
பதுங்கிக் கொண்டவன் பாய்கிறான் பெரிதாய்!

குற்ற வாளிகள் தப்புதல் இலையென
முற்றுணர்ந் தவர்போல் மொழியுஞ் சிலவுள
நின்று கொன்றது நயன்மை என்று
மென்று கொண்டே சொல்லுந சிற்சில!

பழிதீர்ந் ததுகாண் கட்சிமீ தென்று
கழிமகிழ் வுறுகிற வேளையில் அணுகி
இருபத் தாறுயிர் என்பது பெரிதெனக்
கருத வில்லையா நீங்கள் என்றால்
அதனினும் பெரிது இராசீவ் உயிரென்று
கதழ்வுறச் சொல்கிறார் தி.மு.க. தலைவர்!

உரத்த குரலில் மக்களின்
அரத்தத்தைச் சூடேற்றிக்
குலையாச் சிறப்பின் இனநலம் பேசும்
தலைவர்கள் பலரும் தளபதியர் சிலரும்
காவலர் நாவலர் புரட்சிகள் என்போர்
யாவருஞ் சற்றும் மனநடுக் கின்றிக்
கொடிய தண்டனை யைவர வேற்கும்
நெடிய பழியில் நிலைத்தனர் அந்தோ
தூக்குத் தண்டனை கொடுத்தற் கான
மீக்கொடுங் குற்றஞ் செய்திலர் என்றே

தெரியினும் அரசியல் ஊதியம் ஒன்றே
பெரிதெனக் கருதும் பதடிகள் நிலையிது!

இனப்பகை ஏடுகள் வரலாறு காணாக்
கனத்த சிறப்பென மெச்சு கின்றன!

இனியே,
**கடனென்ப நல்லவை யெல்லாங் கடனறிந்து**
**சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு** . என்னும்
பொருளுரை போற்றி ஒருதலை யாக
இருபத் தறுவர் உயிரைக் காப்பதை
அறக்கடன் எமக்கென உறுதி பூண்டு
சிறப்புறச் செய்து முடித்தல் வேண்டும்!

மேல்முறை யீட்டுக்கு உச்சநெறி மன்றில்
கால்வைக்கு முன்னர்க் கருதத் தக்கது
சென்னை உயரற மன்றத்தி லேயே
முன்னைப் போலக் கமுக்கமில் லாது
வெளிப்படை உசாவல் வேண்டிப் பெறுவதே
ஒளிக்கப் பட்டவும் மக்கள்முன் வருங்காண்
இன்னணஞ் சொல்வதில் ஐயுறவு வேண்டா
முன்னை நிகழ்ச்சி மாதிரிக்கு உள்ளது!

உயரற மன்றத் தீர்ப்பின் பின்னரும்
நயன்மை நாடிச் செயல்பட வேண்டின்
உலகம் பார்க்க உச்சநெறி மன்றில்
இலகுறு நல்ல தீர்ப்புக்கு முயலலாம்!

இத்த னைக்கும் அப்பால் ஒன்றனை
மெத்தத் தெளிவாய் உணர்தல் வேண்டும்
வளர்ந்து வருந்தமிழ்த் தேசிய எழுச்சியை
இளந்தை நிலையில் கிள்ளி எறிந்திட
வடக்கில் உள்ள ஆளுமை யாளர்தம்
அடக்கு முறையின் தொடக்கம் ஈது
குற்றச் சாட்டுகள் உசாவல்கள் எல்லாம்
பெற்ற வாய்ப்பே அன்றிவே றில்லை
இக்கொடு மிரட்டல்போல் இனிவரா திருக்கத்
தக்க அரசியல் தலைப்படல் வேண்டும்
அழிக்க லாகா ஆற்றலாய்
எழுச்சி கொள்க தமிழ்த்தே சியமே!

—இறை

# அறுபருவத் திருக்கூத்து

— பாவலரேறு பெருஞ்சித்திரனார் —

**பாட்டுச் சுருக்கம்:**

ஆரிடி முழக்கிய கார்காலம் அடங்கியது. அது தேய்ந்து ஒய்ந்து போகுமுன் தன் வலிவெல்லாங் காட்டினாற் போல, துலை (ஐப்பசி) மாதத் தொடக்கத்தே அடைமழை வலுத்துப் பசியின் நிலையை யடக்கிய மேலோன் கைபோல் ஒடுங்கிப்போனது. முன் மாதங்களில் கருமை பூண்டிருந்த வானம் வெளிர்கின்றது. ஆர்த்து முழக்கிய இடியும் அடங்குகின்றது. மின்னல் அயர்ந்தது. வானவில்லைப் பார்க்க இயல்வதில்லை. குளிர்காற்றால் நிரம்பிய வானம் முழுதும், செங்கோன்மை குன்றிப்போன அரசன் ஒருவனின் ஆட்சிக்குட்பட்ட நிலம்போல் அழகு குன்றிக்கிடக்கின்றது. கருமுகில்கள் காணப்படுவதில்லை. தெள்ளிய நீர்த்தேக்கத்தே உலவுகின்ற அன்னக் கூட்டங்களைப் போல நீரற்ற வெள்ளிய முகிற் கூட்டங்கள் மட்டுமே வானில் உலவுகின்றன. வர்னில் பறந்து திரிந்த குருகுகள் வான்விட்டு இறங்குகின்றன. எழுந்து விரியாத மென்மையான தோகையை ஏந்தித் திரியும் மயிற்சேவல்களைப் பெண்மயில்கள் நெருங்க விடுவதில்லை. நாரைகள் உயரப் பறவாத நிலையில் தந்தம் பிணையொடு பொழில்களில் உலவுகின்றன.

நிலைகளில் நீர் தெளிந்திருக்கின்றது: ஆற்றுநீர் கரைமீறி ஓடுகின்றது. கரைகளில் பெண் நண்டுகளோடு ஆண் நண்டுகள் மேய்கின்றன. நீண்ட கண்களை உடைய நத்தைகள் இலைகளைப் பற்றி நகர்ந்து செல்கின்றன. சிறு சங்கும், இப்பியும் நீரோடு வருகின்றன. சிறுசிறு மீன்கள் பெருகுகின்றன. அவை தந்தம் இனத்தோடு கழிவாய்களில் குதிக்கின்றன.

வயல்களில் வாளை மீன்கள் புரள்கின்றன. அங்குள்ள பயிர் நெற்றுகள் முதிர்ந்து தலைசாய்ந்து கிடக்கின்றன. வீசுகின்ற கூதிர்க்காற்றுக்குப் பொறுக்காமல் அன்னங்கள் காமுறுகின்றன. நீண்ட அலகுகளால் ஓசைகளை எழுப்பியவாறு அவ்வன்னங்கள் ஓயாமற் புணர்ந்து மகிழ்கின்றன.

கரையோரங்களில் புற்கள் அடர்ந்து விளங்குகின்றன. பொய்கைப் புனலின் ஆம்பல் மலர்கள் விரிந்து அழகு செய்கின்றன. தாமரை மண்டிய பசிய இலைப்பரப்புக்களில் பனிநீர்த் திவலைகள் தூங்குகின்றன. அடர்த்த வேலியிடத்தே இருண்ட கால்களையுடைய நொச்சிச் செடிகள் பூத்து மணம் பரப்புகின்றன. புதரெங்கும் நாணற்செடி மலிந்து பூக்களோடு விளங்குகின்றது. அழகிய பொன்போன்ற தாதுக்களை அடிநிலத்தே பரப்பியவாறு செம்பஞ்சு மலர்கள் தோற்றமளிக்கின்றன. அவற்றிடையே வண்டுகள் மொய்க்கின்றன. கார்காலத்தே பூத்து மலர்களோடு விளங்கி நின்ற அழகிய கொன்றைமரங்கள் அம்மலர்களை ஊழ்த்தி நின்று, இனிய பனித் துளிக்குத் தம் இலைக்கைகளை நீட்டியவாறு, பொன்போன்ற தளிர்களோடு விளங்குகின்றன. முல்லைக்கொடியிலும், மருதமரத்திலும் முற்காலத்தே பூத்த மலர்கள் ஒழிகின்றன. பாலைமரம் பல மலர்களோடு நிற்கின்றன. முள் மேனியும், முறுக்கிய உடலும் பூண்டு, தூக்கி நின்ற உருவையுடைய கள்ளிச் செடிகள் மலர்ந்து காட்டை அழகுசெய்கின்றன.

சோலையில் உள்ள பறவைகள் நீர்ச்சுனைகளை விட்டு நீங்கிக் காலை வெயிலிற் தந்தம் சிறகுகளை உலர்த்துகின்றன. துள்ளுகின்ற கால்களை அடக்கியவாறு மான் இனம் தம் அடிவயிறுகளை வெயிலிற்காட்டி அயர்கின்றன. யானைக்கூட்டங்கள் பெருத்த குரல் எழுப்பி ஆர்த்து எதிரேறிவரும் இளஞாயிற்று இன்னொளி குளிக்கின்றன. அடிக்கின்ற ஊதைக்காற்றால் உடல் மிகவருந்திப், பேதைக் குறுமுயல்கள் வருந்திக் கிடக்கின்றன.

மலைவாழ்மக்கள் கொழுமையான தினைமாவையும், இனிய சுவைபொருந்திய தேனையும் உண்ண மனங்கொள்ளாமல், நெய்யில் துவள வதக்கிக் குழைவித்த கீரையொடு தினையரிசிச் சோற்றை விரும்பி உண்ணுகின்றனர். கம்பளி ஆடையைப் போர்த்திய அவர்கள் செஞ்ஞாயிற்றின் இளவெயிலிற் குளிர்காய்கின்றனர். சிறுவர்கள் மூட்டிய செந்தீயின் வெப்பத்தைப் பெற விரும்பி முதியவர்கள் அத் தீமூட்டத்தின் அருகே சூழ்ந்துகொள்கின்றனர். குளிர்ந்த நீரைத் தவிர்த்து வெந்நீரையே அதிகம் பயன்படுத்து கின்றனர். கிண்ணத்தில் வைக்கப்பட்டிருந்த சந்தனச் சாந்து எடுத்து வீசப்படுகின்றது.

மகளிர், நெய் மிகுதியாக நீவப் பெறாத தம் நீண்ட கூந்தலுக்கு நறும்புகை யூட்டிக்கொள்கின்றனர். பூச்சூடிக் கொள்வது அவர்

களால் தவிர்க்கப்படுகின்றது. குளிர்ச்சி நிறைந்த மஞ்சட் சாந்தை மகளிர்தம் முகங்கள் சிறிதளவே ஏற்கின்றன. உள்ளங் கைகளை அடுப்பின் வெப்பத்தில் சூடேற்றி அவர்கள் தம் முகங்களில் ஒற்றிக் கொள்கின்றனர்.

இல்லத்தின் அருகே நிற்கும் பாக்கு மரங்களின் அழகிய குலைகளில் பழங்கள் குலுங்குகின்றன. ஆக்கள், தம் மடிக்காம்பு களைக் கன்றுகள் வாயாற்கதுவி ஊட்டி நலிவுறுத்தலால் அக்கன்று களை அப்பால் விலக்கிவிடுவதோடு தம் வெளிர்நிற வாயை அசை போடுவதில் சோர்வுறுகின்றன.

ஆண்பாலார், தம் செவிப்பறையிற் பட்டுக் குளிரச் செய்யும் கூதற் காற்றுக்கு அஞ்சிப் போர்வையால் தம் காது மறையுமாறு இறுக்கமாகத் தலைப்பாகை கட்டிக் கொள்கின்றனர். குழந்தையைத் தம் மார்பகத்தே தழுவியடக்கிக்கொள்ளும் பெருமை பொருந்திய மகளிர்தம் உடலிற் புகுங் குளிரைத் தாங்க மாட்டாமையால் அவர் களுடைய தாடைகள் நடுங்குதலால் பறைகொட்டுவது போல் பற்கள் ஒலியெழுப்புகின்றன.

மாலையில் வீசும் கூதற்காற்றின் குளிருக்கு அஞ்சிய மகளிர் சீலையைப் போர்த்திக்கொண்டு சேல்மீன் போலும் தம் கண்களை மூடி உறக்கங்கொள்கின்றனர். இளமை நிறைந்த வாளிப்பான பெண்கள் உள்ளத்தே எழுகின்ற காதல் நோயினால் வருந்துமாறு அடிவானத்தே தோன்றிய குளிர்ச்சி பொருந்திய நிலவொளி விளைக்கும் கொடிய வெப்பம் மிகுந்து, அம் மகளிரிடத்து முன் தோன்றியிராத காமநோயைத் தோற்றுவித்து உயிரைக் கொல்வது போல் அவர்களைத் துன்புறுத்துகின்றது.

வானத்தே மீன்கள் தெளிவாகத் தோன்றவும், அழகிய ஒளியைத் திங்கள் வெளிப்படுத்தவும் சிதறலாக இடையிடையே காணப்படும் கார்முகில், பூக்கள் நிறைந்த அல்லிக் குளத்தில் படர்ந்திருக்கும் அல்லியின் இலைகள் போலக் காட்சியளிக்கின்றது. தம் வாழ்க்கைத் துணையொடு கூடியிருப்பவர்கள் கூதிர்காலம் இனிதென்று பாராட்டி மகிழ்கின்றனர்; பிரிந்திருப்பவர்களே அஃது இன்னாது என்று வருந்துகின்றனர்.

நிலாமுகிப் பறவை தன் இனிய பெண்பறவையுடன் மதியின் ஒளிமழையில் நனைந்தவாறு வானில் பறந்து திரிகின்றது. வீடுதோறும் முற்றத்தின்கண் சிறிய அகல் விளக்குகள் அழகுற ஒளி

வீசுகின்றன. அவற்றின் சுடர் அணைந்துவிடாமல் பணியாளர்கள் நெய்யூற்றி எரியச் செய்கின்றனர்.

கற்பியல் மேற்கொண்டு இல்லறத்தே சிறந்து வாழும் மகளிர் பூப்போலும் கண்ணையுடைய தம் குழந்தை துயில்கொள்ளுமாறு தொட்டிலிலிட்டு ஆட்டி, அதன் சிலைபோலும் அழகிய உடலை நன்கு போர்த்திவிடுகின்றனர். பொருந்திய கதவைத் தாழிட்டு, மிகுந்த காதல்கொண்ட தம் கணவர்தம் மார்பின் வெப்பத்தில் ஒன்றி, அவர்கள் மணம்புரிந்து கொண்ட தலைநாள் போல மகிழ்ந்திருக்கின்றனர்.

பால்போலும் வெண்ணிலவில் மூழ்கிப் பனியின் குளிரை மறந்து அழகு என்னும் ஆடையை உடுத்திய கூதிர்காலம் என்னும் பெண்மகள் வருகை தந்தனள்! வருகை தந்தனள்!! உடலின் உள்ளே துளைத்துச் சென்று குளிரூட்டும் கூதிலாகிய ஊதைக் காற்றை மூச்சுயிர்த்து, அல்லியின் இதழ்களை மலரச் செய்து, குன்றகத்துப் பூஞ்சோலை சுனையின்கண் வாழும் சிவந்த கால்களையுடைய அன்னப்பறவையொடு, இனிய குளிரையுடைய கூதிர்காலம் எனும் பெண்மகள் அழகுற நடந்து வருகை தந்தனள்!

## 2. கூதிர்

**காலம் : துலை, நளி (ஐப்பசி, கார்த்திகை)**

**காதுப்பறை குளிருங் கூதிர்ப் பற்பறை**

துலைமதித் தொடக்கத் தடைமழை வலுத்து
நிலைபசி யடக்கிய மேலோன் போல

கார்நகர்ந் தொடுங்க, கருவான் வெளிர,
ஆரிடி அடங்கி அயர்ந்திட மின்னல்,

வான்வில் மேவா வளிவான் முழுதும்
கோன்மை குன்றிய கோநிலம் போலக்

களையிழந் திருப்பக், கருமுகில் வெளிர்ந்து
தெளிநீர் ஓடைத் திரிதரு மன்னக்

குழாமென் றுலவ, குருகுவான் நீங்க
ஏழாமென் பீலி ஏந்துமயிற் சேவற்

கிணைபெடை புலப்ப எழுந்துயர் பறவாப்
பிணையொடு நாரைக் குழாம்பொழி லுலவ

நிலைநீர் தெளிய, நெடும்புன லாற்றி
னலைகரை மீற, அலவற் பெடையொடு

நிலந்தலை மேய, நெடுங்கண் நத்தை
இலையிவர்ந் தலைய, இப்பியுஞ் சங்கும்

புனலொடு மிதப்ப, பொடிமீன் பெருகி,
இனத்தொடு கழிவாய் யாங்கணும் குதிப்ப,

வாளை புரளும் வயல்தொறும், முதிர்ந்த
சூலிக் கதிரொடு பயிர்தலை சாய,

கூதிர்க் காற்றா குறுங்கால் அன்னம்
காதன் மேம்படக் காமப் பெடையோ
டோயா நீள்வாய் ஓங்கிசை அரற்றி
மாயாப் புணர்ச்சி மகிழ்ந்திடப், பொய்கை

ஆம்பல் விரிதந் தணியொடு விளங்கப்
பூம்புனல் மருங்கிற் புல்லடர்ந் தோங்க,

முட்கொடித் தாமரை மூசிலைப் பரப்பில்
முத்துச் சிறுபனி மொய்துளி தூங்க,

இலையொடு மணக்கும் இருங்கால் நொச்சி
அலைமண மலரோ டரசேய்ந் திருக்க,

பூணுநல் மலரொடு புதர்மிசை யெங்கும்
நாணல் மலிந்து நனிநடம் பயில,

அம்பொன் சுண்ணம் அடிநிலம் பரப்பிச்
செம்பஞ் சின்மலர் செறிவண் டிமிர,

கார்கை தடவக் கடிமலர் தூங்கிய
ஆர்பூங் கொன்றை அம்மலர் ஊழ்த்தி,

இன்றுளிப் பனியினுக் கிலைக்கை நீட்டிப்
பொன்றளிர் போர்த்துப் பொலிவொடு நிற்ப,

முல்லை, மருதம் முன்மலர் ஒழிய
பன்மலர் அடுக்கிப் பாலை விளங்க,

முள்ளின் மேனி, முறுக்குடல் தூக்கிய
கள்ளி மலர்ந்து காடணி செய்ய,

சோலைப் புட்கள் சுனைவாய் நீங்கிக்
காலை வெயிலிற் கடிசிற குலர்த்த,

துடிகால் அடக்கித் தோன்றிள வெயிற்கே
அடிவயிறு காட்டி மானினம் அயர,

கரிக்குழா மலைகுரல் காட்டிக் கான்வயின்
எரியிள ஞாயிற் றின்னொளி முழுக்க

ஊதைக் காற்றுக் குடல்மிக வருந்தி
பேதைக் குறுமுயல் பேதுற் றுயிர்க்க,

குன்றக் குறவர் கொழுந்தினை மாவும்
இன்சுவைத் தேறலும் இசைந்தருந் தாமல்
நெய்துவள் கீரை மைபடக் கிளறி
வெய்தினைப் பொங்கலொடு விரும்பி யுண்ண,

மக்கள் போர்த்திய மயிர்மலி யுடையொடு
செக்கர் ஞாயிறு சிறுவெயிற் குளிப்ப,

சிறுவர் மூட்டிய செவ்வெரி மருங்கில்
பெறுகனல் விரும்பிப் பெரியோர் சூழ,

தண்ணீர் தவிர்த்து வெந்நீர் பெருக்கக்,
கிண்ணச் சாந்தங் கிடைபெயர்த் தெறிய,

நெய்ம்மிக மேவா நீள்குழற் பெண்டிர்
கும்புகை காட்டிக் கடிமலர் துறந்து,

மொய்குளிர் மஞ்சள் முகஞ்சிறி தேற்ப,
கையகம் அடுப்பனற் காட்டிப் புதைக்க,

மனைமருங் கெழுந்த மணிக்குலைக் கமுகம்
கனியொடு குலுங்கக், கன்றுவாய்க் குதப்பிய

நான்முலைக் காம்பு நலிவுறப் புறந்தள்
ளானினம் வெள்வாய் அசைவில் அயரக்

காதுப்பறை குளிருங் கூதிர்க் கஞ்சிச்
சேதுகிற் போர்வை ஆடவர் செறிப்ப,

மகவுமார் படக்கிய மாண்புறு பெண்டிர்
புகுவுகுளிர் தாங்காக் கொடிறுபறை கொட்ட,

மாலைக் கூதிர்க்கு மகளிர் அஞ்சிச்
சேலை போர்த்திச் சேல்விழி மூட,

இளமை மொய்க்கும் வளமைக் கன்னியர்
கிளர்நோ வருந்தக் கீழ்வான் நிலவின்

குளிரொளி படுத்துங் கொடுங்கனல் மீறி
விளையாக் காமம் விளைந்துயிர் செருக்க,

தெளிவுற விண்மீன் திகழ்படத் திங்கள்
ஒளியழ குமிழ உதிரிக் கொண்டல்

அல்லிப் பூங்குளத் தகலிலை யேய்க்க,
புல்லியோர் போற்றப் புலந்தோர் வருந்த,

நிலாமுகி நறும்பெடை நிலவொளி நனைந்தே
உலாவர, முற்றத் துயர்மனை தோறும்

கையகல் விளக்கம் கவினுற விளங்க,
நெய்பெய் திளையர் சுடர்நிலை நிறுத்த,

கற்பியல் வாழ்வின் நற்றிற மகளிர்
பொற்புறு குழவி பூங்கண் துயில்ச்

சிறுதா லாட்டிச் சிலையுடற் பேணி
உறுதாழ் இறுக்கி, ஒங்கிய காதற்

கணவர் நெஞ்சின் கனப்பி லொடுங்கிப்
மணநாள் போலும் மகிழ்வுற் றிருப்ப,

பாலொளி குளித்துப் பனிக்குளிர் மறந்து
கோலத் துயில்படக் கூதிர்ப் பெண்ணாள்

நடைதந் தன்றே! நடைதந் தன்றே!
குடைகுளிர்க் கூதிர் ஊதை உயிர்த்தே

ஆம்பல் விரித்தே அலர்ந்திடப் பாறைப்
பூம்பொழிற் சுனைவாய்ப் பொற்கால் எகினம்

தன்னொடு நடந்து தலைவந் தன்றே,
இன்குளிர்க் கூதிர் எனுமோர் பெண்ணே!

○○○

# இந்தமுறை யாருக்கு ஒப்போலை போடுவது?

இன்னும் சில நாள்களில் தேர்தல்!

இந்தியா குடியரசு நாடாக அறிவிக்கப்பட்டு இத்தேர்தல் முறை நடைமுறைக்கு வந்தபின் நாடாளுமன்றத்துக்கென நடத்தப்படுகிற 12-ஆவது தேர்தல் இது.

நம்மை யார் ஆட்சி செய்வது—என்று நாம் எண்ணி நமக்கான நல்லவர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுகிற பெரிய உரிமை நம்மிடம் இருப்பதாக நம்மை நம்பவைத்து இப் போலிக் குடியரசு நாடுகளில் நடத்தப்படுகிற பெரும் மோசடியே தேர்தல்.

இத் தேர்தல்வழி நாடாளுமன்றமோ, சட்டமன்றமோ தேர்ந்தெடுக்கப்பட்டாலும் அல்லது தேர்ந்தெடுக்கப்படாவிட்டாலும் இந்தியா என்பதும், அதன் கீழ்த் தமிழகம் என்பதுமான ஆட்சி நடைமுறைகள் இருந்துகொண்டுதான் இருக்கும்.

நாடாளுமன்றங்களோ, சட்டமன்றங்களோ கலைக்கப்பட்டுத் தேர்தல்காலம் வரையிலும், குடியரசுத் தலைவர் ஆட்சி நடத்தப் படுவதாக அறிவிக்கப்படுகிறதே அந்தக் காலங்களில் இந்திய அரசோ, தமிழக அரசோ செயல்படாமல் நின்றுபோய்விடுவதில்லை.

அவை செயல்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றன. ஆக, அரசமைப்பை இயக்குகிற அச்சு, நாடாளுமன்றமோ, சட்டமன்றமோ இல்லை. அவற்றை இயக்குவது ஆள்வினை(நிர்வாக)த்துறையும், நயன்மை (நீதி)த் துறையுமே ஆகும்.

ஆனால், சட்டமன்ற பாராளுமன்ற அமைப்புகளுக்கு மட்டுந்தாம் தேர்தல் நடத்தப்படுகிறதே யல்லாமல், அந்த ஆள்வினைத் துறைக்கும், நயன்மைத் துறைக்கும் தேர்தல்கள் நடத்தப்படுவதில்லை.

அவற்றின் ஒவ்வொரு துறைக்குமான பணியாளர்கள், பொறுப்பாளர்கள் அவர்களுக்கு மேலான அதிகாரிகளாலேயே அமர்த்தப்படுகின்றனர். அம் மேலாளுமையர்கள் ஆளுமைச் சாதி யர்களாகவும், பார்ப்பனியக் கருத்தாளர்களாகவுமே இருப்பதினால், ஆள்வினைத் துறையும், நயன்மைத் துறையும் பார்ப்பனிய வல்லரசிய இந்தியாவைக் கட்டிக் காப்பனவாகவே இருக்கின்றன.

எனவே, பார்ப்பனியத்திற்கு மாறாகவும், வல்லரசியத்திற்கு எதிராகவும் கருத்துள்ளவர்கள் இந்த நாடாளுமன்ற—சட்டமன்ற

அமைப்புகளில் ஒருவேளை தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டால், அவர்களை நிலையாக அமர்த்தவிடாமல் எவ்வகையிலோ ஒரு வகையில் வீழ்த்துவது என்பதையே நோக்கமாகக் கொண்டது இந்த இந்தியக் கட்டமைப்பு.

இந்தக் கட்டமைப்பு மிகவும் வலுவானதானாலும், பார்ப்பனியத்தை நிலை நிறுத்துவது என்பதையே நோக்கமாகக் கொண்டதாக இருந்தாலும், அது—மக்கள்—எழுச்சியால் அடக்கப் படவும், அவ் வெழுச்சியால் அழிந்துபோகவுமே செய்யும்.

என்வே, அவ்வெழுச்சி ஒருவேளை நடந்துவிட்டால், எங்கே தம் ஆளுமைக்கான வலிமை அழிந்து போய்விடுமோ, அதனால் தாம் ஆளுமையராய் இல்லாமல் போய்விடுவோமோ என்கிற காரணத்தால்தான்—இக்கட்டமைப்பு மக்களைக் குமுகம் பற்றி அறிவற்றவர்களாக வைத்திருப்பதோடு, மக்கள் ஓரணியாகத் திரண்டு விடாமலும் பார்த்துக் கொள்ளுகிறது.

மக்களைப் பல தட்டினர்களாக, பல சாதியினர்களாக, பல்வகை முரண்பாடுடையவர்களாகப் பிரித்து வைத்திருக்கிறது.

தங்களின் இந்தக் கட்டமைப்பு மக்களுக்கான குடியரசு அமைப்பைக் கொண்டதான கண்கட்டு வேலை காட்டுவதற்குத்தான் இடை யிடையே தேர்தல் என்கிற நாடகமாடுகின்றார்கள் இவர்கள்.

அத் தேர்தல்வழித் தேர்ந்தெடுக்கப்படுபவரைத் தங்களின் கைப் பாவைகளாக வைத்துக்கொண்டு ஆட்டுவிக்கின்றன இந்த ஆள்வினை(நிர்வாக)த் துறையும், நயன்மை(நீதி)த் துறையும்.

மேலும்—இத் தேர்தல்வழித் தேர்ந்தெடுக்கப்படுபவர்களோ கூட—பணம் படைத்தவர்களாகவும், சாதியச் செல்வாக்குப் படைத்தவர்களாகவும், பிறவகையில் ஆளுமை கொண்டவர்க ளாகவும் இருப்பதினால்தான் இந்த ஆளுமைக் கட்டமைப்பைக் கூடுதலாகக் கட்டிக் காப்பவர்களாகவே இருக்கின்றனர்.

ஒருவேளை அத்தகைய பின்புலம் இல்லாதவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டாலும், இந்தப் போலிக் குடியரசுக்கான ஆளுமைக்குப் பழகிப் போகிறபடியான வகையில் அவர்களுக்கெனச் சலுகைகளும், ஊழல்களும், கொள்ளைகளும் மலிந்துபோய்விட்டன.

ஆக, இத்தகைய ஆளுமைக்கான பொன்விழாக் கொண்டாட்ட ஆண்டில்தான் இவ்வகையில் இன்றைக்கு இந்தத் தேர்தல் நாடகம் அரங்கேறியிருக்கிறது.

முன் எப்போதைய தேர்தலின் அணுகுமுறையைக் காட்டிலும், இந்தத் தேர்தல் சற்று வேறுபாடுடையது.

இந்தியாவிற்கான தேர்தல்முறையில் ஒவ்வொரு தேர்தலும் அடிப்படையில் ஒரே நோக்கம் கொண்டதாக இருப்பினும் அணுகு முறையில் சில மாற்றங்களைக் கொண்டே இருந்திருக்கின்றன.

பேராயக் (காங்கிரசு) கட்சி இந்தியா முழுமையும் ஆண்ட நிலையிலான அணுகுமுறையும், அ்து ஆளுமை செய்கையில் தேசிய இன உணர்வுகள் நசுக்கப்பட்டதை எதிர்த்து உருவான தேசிய இனம் தழுவிய கட்சிகளின் அணுகுமுறையும், கடந்த காலக் குமுக வரலாற்றில் பெரும் மாற்றமாகவே நிகழ்ந்தன.

தேசிய இன உணர்வோடு எழுந்த அந்தத் தேசிய இன கட்சிகள், குறிப்பாகத் தி.மு.க. கொள்கையில் உறுதியுடன் இல்லாமையாலும், தன் பதவி நலனை மட்டுமே கருதியதாலும் கொள்கையைப் படிப்படியாகக் கைநெகிழ்த்தது. இந்திய ஆளுமைப் பார்ப்பனியத் தோடு, இணைந்து மெல்ல மெல்லத் தன் கொள்கையினை அதனுடன் கரைத்துக்கொண்டது.

"அடைந்தால் திராவிட நாடு இல்லையேல் சுடுகாடு"—என்று தொடங்கியதும் "திராவிட நாட்டுப் பிரிவினைக் கொள்கை ஒத்தி வைக்கப்பட்டாலும் அதற்கான காரணங்கள் அப்படியே இருக்கின்றன"—என்றதும், பின் "நடுவத்தில் (மத்தியில்) கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி"—என்று தில்லியோடு ஒட்டத் தொடங்கியதும், அதன்பின் "உறவுக்குக் கை கொடுப்போம் உரிமைக்குக் குரல் கொடுப்போம்"— என்று முழங்கியதும், தொடர்ந்து "நேருவின் மகளே வருக! நிலையான ஆட்சி தருக!"—என்றதும் தமிழ்த் தேசிய எழுச்சி அரசியலை இந்தியக் கட்சிகளின் காலடியைத் தொட்டுத் தொடர்ந்ததும் வெறுமனே பழங்கதைகள் அல்ல.

தமிழ்த் தேச எழுச்சியை எந்த அளவு இத் தேர்தல் கட்சிகள் தம் ஆட்சி நலனுக்குப் பயன்படுத்திக் கொண்டு, அதையே தம் காலடியில் போட்டு மெல்ல நசுக்கி அதன்மீது இந்திய வித்தையும், பார்ப்பனிய வித்தையும் தூவி அதனோடு ஒட்டி வளர்ந்தன என்பதை அறிவதற்கான செய்திகளாகவே அப் பழங்கதைகள் உள்ளன.

தி.மு.கழகம் செய்த அந்தப் படியான தமிழின முன்னேற்றத்திற் கான எதிர் நடைமுறைகள்தாம் இன்றைக்கு அ.தி.மு.க., ம.தி.மு.க. மூலமாகப் படிப்படியாகத் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

ஆக, ஏய்க்கிற கட்சிகளில் எந்தக் கட்சியும் தமிழின நலன் கருதுவதாகவோ, தமிழர் உரிமைக்காகக் குரல் கொடுப்பதாகவோ இல்லை.

அவை யாவும் தேர்தல் நலனில் சுவைகண்டும், பார்ப்பனிய இந்தியாவுடன் தம்மைக் கரைத்துக்கொண்டும் தமிழின உரிமைகளைப் படிப்படியாக அடகு வைக்கிற முயற்சியிலேயே தங்களுக்குள் போட்டியிட்டுக் கொள்ளுகின்றன.

கடந்த காலங்களில் இந்திரா காந்தியை யார் போய் முதலில் சந்தித்துக் கூட்டு வைப்பது என்பதில் இருந்த போட்டிகளில் தமிழர் மானத்தை எப்படி விற்றார்களோ அப்படியேதான் இன்றைக்கும் சோனியாவின் பேராயக் கட்சியோடும், பாரதீய சனதா கட்சி யுடனும் கூட்டுச் சேர்வதற்குப் போட்டிப் போட்டுக்கொண்டு அலைகிறார்கள்.

இத்தகைய போக்கில் நடக்க இருக்கும் இன்றைய நாடாளுமன்ற தேர்தலுக்கென இக்கட்சிகளின் நடைமுறைகள் அனைத்தும் முன்னதன் தொடர்ச்சியே யானாலும், அவற்றின் இன்றைய அடிமைப் போக்கு மானமுள்ள தமிழர்கள் அனைவரும் வெட்கித் தலைகுனியத்தக்கதாகவே அமைந்துள்ளது.

வட இந்தியன் ஒருவனுக்கோ, பார்ப்பான் ஒருவனுக்கோ இல்லாத அக்கறையும், இந்தியப் பற்றும் இந்த அடிமைத் தமிழகத் தலைவர்கள் தங்களிடம் இருப்பதாக அந்த இந்தியக் கட்சிகளுக்குக் காட்டிக் கொள்ளுகிற போக்குகள் அருவருப்பானவையும் இழிவான வையுமாகவே உள்ளன.

அதேபோது,

பார்ப்பனிய ஆளுமையை—இந்து மதவியல் ஆளுமையை இந்தியா முழுக்கப் பரவிடச் செய்வதும், தேசிய மொழி இன வழி அடையாளங்களை மெல்ல மெல்ல அழித்து – அனைத்தையும் பார்ப்பனியத்தின் கீழ் அடிமைப்படுத்துவது என்பதையுமே நோக்கமாகக் கொண்ட பாரதீய சனதா கட்சியின் முயற்சிகள் கொஞ்ச நஞ்சமல்ல.

'பாரத மாதாக்கி ஜெ!'—என்று நெற்றியில் சாந்தை நீட்டி—இளைஞர்களின் அறிவையும் – ஆற்றலையும் வீணடிக்கிற இவர்களின் போக்கு எதுவும் உருப்படுவதற்கானதில்லை.

'இந்தியனாய் இரு, இந்தியப் பொருளையே வாங்கு'—என்று பேசிக் காட்டிய இந்திரா காந்தி எப்படி வெளிநாட்டு வணிகங்களை யெல்லாம் திறந்துவிட்டு—இந்நாட்டு வணிகத்தையே நசுக்கினாரோ—அப்படியேதான் 'இந்துக்களாய் இரு, இந்துப் பொருள்களையே வாங்கு'—என்று வெறிக்கூச்சலிடுகிறது பாரதீய சனதா கட்சி.

'பெபுசி கோலா', 'கொக்கோ கோலா'—போன்று சிறிய பொருளின் தேவைக்காகக்கூட வெளிநாட்டு நிறுவனங்களையும், பொருள்களையும் நுழைய விட்டுவிட்டு அதை நுகர்வதின் வழி உள்நாட்டு உழைப்பையெல்லாம் காலில் போட்டு நசுக்குகிற இந்தக் கட்சிகள் யாருக்காக இந்த மேற்படி முழக்கத்தைச் சொல்லுகின்றன.

வல்லரசிய உறவோடு – மண்ணின் மக்களுக்கே எதிராகச் செய்யப்போகும் ஆட்சியைத்தான் 'நிலையான ஆட்சி'—என்று இட்டிலரிய தன்மையில் இவர்கள் கொக்கரிக்கின்றனர்.

தேர்தல்வழி ஒப்போலை பெறுவது, ஆட்சியைப் பிடிப்பது என்பதைக் காட்டிலும், அக்கட்சிக்குத் தன் ஆளுமை நச்சுக் கொள்கை வழி 'பாரதத்தைக் காப்பது(!)'—என்பதே அடிப்படைக் கொள்கையாக அன்றோ இருக்கிறது.

இப்போதைய தேர்தலுக்காகப் பல்வேறு மாநிலக் கட்சிகளுடனும் அக்கட்சி கூட்டு வைத்துக் கொண்டாலும்—எந்தக் கூட்டின் வழியாகவும் அக் கட்சி தன் அடிப்படைக் கொள்கையை விட்டுக் கொடுத்துவிடவில்லை.

இந்திய அளவில் ஐம்பதுக்கும் மேற்பட்ட கட்சிகளுடன் தேர்தல்கூட்டு வைத்துக் கொண்டேகூட அக்கட்சி **'இராமர் கோயில்'** கட்டுவது என்பதையும், இருக்கிற குறைந்த அளவு மாநில உரிமை களையும் குறைக்கிற முயற்சியின் முதற்பணியாய் காசுமீரத்திற்கான தனி உரிமைகளை நீக்குவது என்பதையும் பிற இது போன்றதான செய்திகளையும் சிறிதும் விட்டுக் கொடுத்திடவில்லை.

தாம் கடந்த தேர்தலில் வென்று ஆட்சி அமைத்த பகுதிகளில்—

கல்வித் துறையில் கவனம் செலுத்தி ஆரியரே இந்நாட்டின் முதற்குடிகள் என்றும், திராவிடர் அல்லது தமிழர்ப் பற்றியான எக் குறிப்பும் இல்லாமலும் செய்தவகையிலும்,

ஊரெல்லாம் கோயில் கட்டி, பிள்ளையார் ஊர்வலம் நடத்தி, மக்களுக்கு மதவெறி ஊட்டிக் காட்டு விலங்காண்டிகளாய் மாற்றுவதிலும்கூட எவ்வளவு அக்கறை செலுத்தி இருக்கிறது.

அவர்களின் ஆரியப் பண்பாட்டை நிறுவுவதற்கு அக்கட்சி எடுத்துக் கொள்ளுகிற முயற்சியை விட்டுக் கொடுத்துவிட்டு அக்கட்சி தேர்தல் குறித்துப் பேசுவதும் இல்லை—தேர்தலில் நிற்பதும் இல்லை.

ஆனால் இத்தமிழகக் கட்சிகளின் போக்கு எவ்வளவு கீழ்த்தரமானது.

— பாரதீய சனதா கட்சி ஒன்றும் தீண்டத்தகாத கட்சி இல்லை என்று தி.மு.க. அறிவிப்பதும்,

— இருக்கிற கட்சிகளில் நேர்மையானதும், மதச் சார்பற்றதும் பாரதீய சனதா கட்சிதான் என்று பா.ம.க. அறிவிப்பதும்,

— அ.தி.மு.க.வும், ம.தி.மு.க.வும் கூட்டாகப் பா.ச.க.வுடன் உறாவாடிக் கூத்தாட்டம் ஆடுவதும்

எவ்வளவு பெரிய இன அழிப்பு முயற்சிகள்.

நினைக்கவே நெஞ்சம் பதைக்கும் போக்குகளல்லவா இவை.

இவர்களுக்குத் இத் தமிழின முன்னேற்றத்தில், தமிழர் வாழ்வுரிமைகளில் என்ன அக்கறை இருக்கிறது.

இராசீவ் கொலைவழக்குத் தீர்ப்பில் பொய்யாய்த் தொடர்பு படுத்தப்பட்டவர்கள் இருபத்தாறு பேருக்குத் தூக்கு என்று அரசியல் சூழ்ச்சியாய்—சோனியாவைச் சரி செய்வதற்காக அறிவிக்கப் பட்டபோதுகூட ஊமைகளாகவும், தவறுக்குத் தண்டனை என்று மோழைகளாகவும் அல்லவா இத் தமிழ்த் தலைவர்கள் இருந்தார்கள்.

தில்லியின் ஆட்சி மொழியாகத் தமிழைக் கொண்டுவருவோம் என்று இந்தத் திராவிடக் கட்சிகள் சொல்லுகிற பசப்புச் சொற்கள் எந்த அளவு பொய்ம்மையானவை!

தமிழகத்தில் தமிழ்வழிக்கல்வி இல்லை. ஓட்டை உடைசலான சிற்றூர்ப்புறக் கூச்சல் பள்ளிகளில்தான் தமிழ் ஒலிக்கிறதே யல்லாமல் எந்த நகரங்களிலும் தமிழ்ப்பள்ளிக்கூடங்கள் மருந்துக்குக்கூட இல்லையே. பொறியியல், மருத்துவம், அறிவியல் போன்ற உயர் கல்விகள் எதுவும் தமிழில் இல்லை. தமிழகத் தெருக்களில் தமிழ் இல்லை, 'ஆகாஷ்வாணி'யில், 'தூர்தர்ஷனில்' தமிழ் இல்லை, பேருந்துகளின் எண்களில்—வண்டிகளின் பதிவு எண்களில் தமிழ் இல்லை; அரசு அலுவலகங்களில் தமிழ் இல்லை.

—இப்படி நிலை இங்கு இருக்க இவர்கள் தில்லியில் ஆட்சி மொழியாகத் தமிழைக் கொண்டுவரப் போகிறார்களாம்!

எதற்கு அங்கு ஆட்சிமொழியாக்க வேண்டும். இங்குதானே அப்படிச் செய்யவேுண்டும்.

இத்தகைய பொய்ம்மையான முழக்கத்தைச் சொல்லிவிட்டுப் பார்ப்பனிய நலன்காக்கும் கட்சிகளுக்கு வலுவூட்டவும்—அவர்களுக்கு அடிமையாய் இவர்களைச் செயலாற்றச் சொல்லவும் தான் நாம் இவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டுமா?

இதற்குத்தான் தேர்தலா?

தமிழர்களே நாம் சிந்திக்க வேண்டாமா?

இருக்கும் நலன்களில் இன நலம் பெரிதென்றாரே நம் பாவலரேறு ஐயா அவர்கள்.

நம்மில் யார் இவ்வின நலன் குறித்து அக்கறை கொள்ளுவது.

இவ்வின நலன் குறித்த கவலையில்தானே நம் அறிவாசான் அவர்கள், தாம் எவ்வளவு தொல்லைப்பட்ட போதும்—தம் தனிநலன் கருதாமல் 'இருப்பவர் கலைஞரே, வடபுலத் தடைச்சுவர், அவர்!' —என்று '.அவர் ஆட்சியை அரணிட்டுக் காக்க'க் கூறினார்.

அவ் உண்மைப் பெருந்தொண்டுள்ளம் படைத்த நம் அரும்பெறல் ஐயா அவர்களின் சொல்லுக்கு மதிப்பூட்டுகிற வகையிலாவது தி.மு.கழகத் தலைவர் நடந்து கொள்ள வேண்டாமா?

இன நலக் காப்பு முயற்சிக்காக அவர் எடுத்துச் செயலாற்றிய செயல் ஏதும் இல்லையே என்று அவர் வெட்கப்பட வேண்டாமா?

அவர்தம் இறுதிக் காலத்திலாவது இத் தமிழ்ப் பேரினம் தழைக்க வேண்டி முயல வேண்டாமா?

பாரதீய சனதாவும், பேராயக் கட்சிகளும் தங்களின் பார்ப்பனிய ஆளுமை உணர்வைச் சிறிதும் விட்டுக் கொடுக்காமல் தேர்தல் களத்தில் ஆட்டம் போடுகிறபோது—

தி.மு.க.வும், பா.ம.க.வும், ம.தி.மு.க.வும் பிற தமிழிய உரிமைகளுக்காக முழங்குகிற வகையிலாவது இத் தேர்தல் களத்தைப் பயன்படுத்த வேண்டாமா?

வெட்கமில்லாமல் இவர்கள் இந்தியப் பார்ப்பனியத்துக்கு முதுகு சொறிந்துவிட்டுக் கொண்டிருப்பது சரியா?

— இப்படியாகக் கேள்விகளை அடுக்க வேண்டிய கடமையே நமக்கு — தமிழக மக்களுக்கு இருப்பதாக நாம் உணர்கிறோம்.

இருக்கிற கொள்ளியில் எந்தக் கொள்ளி நல்ல கொள்ளி என்று அதை எடுத்து நம் தலையைச் சொறிந்து கொள்வதைவிட,

எரிகிற கொள்ளிகளை இத் தமிழ்ப் பேரின உரிமை முழக்கத்திற்கான எரிதழல்களாய் மாற்ற வைக்கிற முயற்சியே நாம் செய்ய வேண்டிய முயற்சியாய் இருக்கிறது.

எனவே, நமக்கு இன்றைய கடமை யாருக்கு ஒப்போலை போடுவது — யாருக்கு அடிமையாய் இருப்பது என்பதைவிட— நம் அடிமைத் தளையை எவ்வாறு அறுப்பது என்பதும், அம் முயற்சிக்கு இக்கட்சிகள் எவ்வாறு செயல்பட வேண்டும் என்று வலியுறுத்துவது என்பதுமேயாகும்.

—**'தும்பி'**

# போலி ஒருமைப்பாடு !

—மா. பூங்குன்றன்—

'ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்!' என்றொரு வழக்கு மொழியுண்டு. 'இரண்டு ஊர்களை ஒன்று படுத்துவது மொத்த வணிகர்களுக்குக் கொண்டாட்டம்' என்ற ஒரு புதுமொழியைக்கூடப் புனையலாம். சூழ்ச்சிக்காகப் பிரிப்பது எவ்வாறு கேடானதோ அவ்வாறே சூழ்ச்சிக்காக ஒற்றுமைப் படுத்துவதும் கேடானதுதான். பன்னாட்டுக் கொள்ளை வணிகர்கள் ஒரு பெரிய நாடு பிரிவதை விரும்புவதில்லை. அந்த நிலைதான் இன்றைய இந்தியாவிற்கும் ஏற்பட்டுள்ளது.

உலக அளவில் இந்தியா ஒரு பெரிய வணிகச் சந்தை. அமெரிக்காவின் 'கொக்கோ கோலா', 'பெப்சி' முதல் பலநூறு நுகர் பொருள்களின் பெருஞ்சந்தையாகவும், சப்பானியர்களின் மின்னணுப் பொருள்கள், வண்ணப்படச்சுருள் முதலானவற்றிற்கு விற்பனைக்களமாகவும் மற்றும் பலநாடுகளின் பல் பொருள் பேரங் காடியாகவும் இன்று இந்தியா திகழ்கிறது. இவ்வாறு இருப்பதால் தான் பல்வேறு மொழி—இனப்பிரிவுள்ள கூட்டு நாடான இந்தியா வை ஒரே ஒரு மொழி இனம் ஆளுமை செலுத்தி அடக்கி ஆண்டு, 'ஓர் இந்தியா' என உரக்கக் கத்திப் போலி ஒற்றுமை பேசிக்கொண்டு கிடப்பதற்கு இங்குள்ள அரசியல் தலைவர்களுக்கும் தரகு முதலைகளுக்கும் பல நாடுகளும் திட்டமிட்டுப் பேருதவியளித்து வருகின்றன. தாம் அடிக்கிற வணிகக் கொள்ளையில் ஒரு துணுக்கை அவர்களுக்கு ஈகின்றன. இவ்வாறு வெளிநாட்டு வணிகர் களிடமிருந்து கையூட்டு வாங்கிக்கொண்டு ஒருமைப்பாடு பேசிக் கொண்டிருக்கிற கூலித் தேசியவாளர்களுக்கு உண்மையிலேயே நாட்டுப் பற்று உள்ளதா? இவர்களின் நாட்டுப்பற்று வெறும் தன்னலக் கூச்சலேயாகும்.

இந்திய விடுதலைக்குப்பின், இந்தத் தலைவர்கள் தங்களுக்குத் தெரிந்தோ தெரியாமலோ செய்துவிட்ட 'நன்மை' ஒன்று உண்டெனில், அது மொழிவழி மாநிலப் பிரிப்பேயாகும். அதன் வழியாக மாந்தன் ஒவ்வொருவருக்கும் இயல்பாக இருக்க வேண்டிய மொழியுணர்வு வெளிப்படத் தொடங்கியது எனவும் கூறலாம். தங்களை இந்தியா என்ற போலிக் கட்டமைப்பிலிருந்து பிரித்துப் பார்க்கத் தொடங்கினர். இதன் மெய்ப்புகளே இன்றைக்கு அனைத்திந்தியக் கட்சிகள் எதுவும் நடுவணரசில் தனித்து வரமுடியாமையும் மாநிலங்களில் பல மாநிலக் கட்சிகள் தோன்றி வருதலும் ஆகும்.

மாநில அரசு அமைச்சர்களும் அதிகாரிகளும்கூடப் பன்னாட்டுச் சந்தைகளின் பிடியினின்று நீங்கியவர்கள் அல்லர். இதற்கு ஒருசான்று: பக்க விளைவுகளும் கேடுகளும் மிகுந்த – மற்ற நாடுகளில் தடை செய்யப்பட்ட ஆங்கில மருந்துகளைப் பன்னாட்டு மருந்து உருவாக்குநர்கள் தரகு பெற்றுக்கொண்டு தாராளமாக விற்பனை செய்ய வழிவகை செய்துள்ளனர். எந்த அமைச்சர்கள் மாறினாலும் அமைச்சர்களின் நாற்காலிக்குக் கொடுக்கப்படுகிற கையூட்டுத் தொகையே இதற்கு வழிவிடுகிறது.

அவர்களுக்கு இந்தவகையில் இந்திய ஒருமைப்பாட்டில் ஒருசில நன்மைகள்கூட இருக்கலாம். ஆனால் அனைத்து அமைச்சர்களும் அதிகாரிகளும் ஒருமைப்பாடு பேசுவது வெளிநாட்டுத் தரகைப் பெறுவதற்கும் உள்நாட்டுக் கொள்ளை முதலாளிகளிடமிருந்து பங்கைப் பெறுவதற்குமே ஆகும்.

ஒருமைப்பாட்டைச் செயற்படுத்துவதன்வழி இந்தியாவின் ஒரு சாரார்க்கு நன்மையும் பிறிதொரு சாரார்க்குத் தீமையும் ஏற்படுவது இயல்பாகிறது. பேராயக்கட்சி தமிழகத்தை ஆண்ட காலத்தில் இந்திய ஒருமைப்பாட்டிற்கு என இந்தி தமிழகத்தில் திணிக்கப் பெற்றது. இந்தியைப் பயிற்று மொழியாக்குவதன் வழி இந்தி மக்களும் தமிழ் மக்களும் ஏற்றத்தாழ்வுக்குட்பட்டனர். தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர் ஒருவர் தம் திறமையை இந்தியில் வெளிப்படுத்த இயலாதவராகிறார். அல்லது இந்தியில் படித்துப் புரிந்துகொள்ள முடியாத நிலையில், அவருக்குத் திறமையிருந்தும் அது பயனில்லாமல் போகிறது. சிறிது திறமையைக் கொண்டு இந்தியில் வெளிப்படுத்தும் திறமையினால் மட்டுமே இந்தியர் ஒருவர் வெல்ல முடிகிறது. இந்தியைத் தாய்மொழியாகக் கொண்ட ஒருவரும் வேற்று மொழி தாய்மொழியினரும் எவ்வாறு ஒரே போட்டியில் ஈடுபட முடியும். தமிழராய்ப் பிறந்ததனால் மட்டுமே அவர் திறன் பெற்றிருந்தாலும் புறக்கணிக்கப் படுகிறார். இந்த வகையில் தமிழ் நாட்டு மக்களுக்குப் பேராயக்கட்சி இரண்டகத்தைச் செய்யத் தொடங்கிற்று.

திராவிட நாட்டுக் கொள்கையே தமிழர்கள் உரிமை பெற ஒரே வாய்ப்பு என்று கூறிக் கொண்டிருந்த தி.மு. கழகத்தினர் அதன் வழி ஆதரவைத் தேடி வளர்ந்து கொண்டபிறகு, மெதுவாக அக் கொள்கையையே கைநழுவவிட்டு ஆட்சிக் கட்டிலேறி இப்போது வரை இந்திய ஒற்றுமை பேசி வருகின்றனர்.

ம. கோ. இரா தம் ஆட்சியில் தமிழ் நாட்டுக்குச் சேரவிருந்த கடல்சார் நடுவணரசுத் தொழிலகங்கள் பலவற்றை வலுவில் தன் மொழியுறவு மாநிலமான கேரளாவிற்குப் போகக் காரணமாக இருந்தார். அரசுப் பேருந்துக் கட்டமைப்புகள் தரங்குறைந்தாலும்

முன்னெடுத்துக் கொண்டவை திராவிடக் கட்சிகளே. தமிழக மக்கள் அக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டுத் திரள்திரளாக அக்கட்சிகளில் சேர்ந்தனர். அக்கொள்கைகள் அனைத்தும் நிறைவேறும் என நம்பினர். அக்கொள்கைகளை முன்னெடுத்த கட்சிகள் அவற்றைத் தொடர்ந்து தம் பதவி எய்தும் வரை கொண்டு சென்றனவா, கொண்டு செலுத்த இயன்றவா என்றால் அதுதான் இல்லை.

குழந்தை கேட்கும் பொருளைத் தராது வேடிக்கை காட்டித் திசை திருப்புவது போல் மக்களும் திசைதிருப்பப்பட்டனர். இந்நிலையைப் பொறுத்தவரை திசைதிரும்புவதில் குழந்தைகளே தாழ்வில்லை எனுமளவில் மக்கள் தங்கள் தேவைகள் அவ்வாறே இருக்க, கவனத்தில் மட்டும் திசைதிரும்பிவிடுகின்றனர்.

கொள்கைகளை நிறைவேற்ற ஆட்சி வேண்டும் என்ற நிலை போய், ஆட்சி வேண்டுவது ஒன்றே கொள்கையாகக் கட்சிகள் அணியமாகிவிட்டன. தாங்கள் முன்னெடுத்த கொள்கைகளை யெல்லாம் கட்சிகளைத் தோற்றுவிப்பதற்கும் வளர்ப்பதற்கும் மட்டுமே பயன்படுத்திக்கொண்டு ஆட்சியை ஏற்றவுடன் நெகிழ்த்து விடுகின்றன.

அக்கொள்கைகளில் ஓரிரண்டை எடுத்துக்கொண்டு அவற்றின் படிநிலை மாற்றங்களைக் கவனித்தாலே இது நன்கு விளங்குகிறது.

தமிழ்நாட்டில் தோன்றிய அனைத்துக் கட்சிகளின் போக்குகளும் இவ்வாறே அமைந்துள்ளதால் கட்சி வேறுபாடின்றி இந் நடைமுறையே நிலவுகிறது. எனவே பின்வரும் செய்திகள் குறிப்பாக ஒரு கட்சிக்கு மட்டுமல்லாமல் பொதுவாகக் குறித்தது.

## 'தமிழ்நாடு தமிழர்க்கே'

இந்திய விடுதலைக்கு என்னென்ன கரணியங்கள் வட இந்திய மக்களுக்கு இருந்தனவோ அவற்றினும் கூடுதலான கரணியங்களை யும் தேவைகளையும் உள்ளடக்கியதாகத் தமிழ்நாட்டு மக்களுக்குத் தனித்தமிழ் நாட்டுக் கோரிக்கையிருந்தது.

தமிழ் மக்களுக்கும் தமிழ் நாட்டிற்கும் உரிமை தரவல்ல ஒரே வழி என்று வலியுறுத்திய முதல் கோரிக்கை இது. ஆனால் ஆட்சி யிலமர்வதற்காக கைவிடப்பட்ட முதல் கொள்கையும் இதுதான்.

ஆட்சியிலமர்ந்தபின் தனிநாட்டுக்கொள்கை உருமாறித் தன்னாட்சி (சுயாட்சி)க் கொள்கையாக நின்றது. ஒரு காலக் கட்டத்தில் தன்னாட்சி பற்றி எங்கும் மும்முரமாகப் பேசப்பட்டது. அடுத்து வரும் தேர்தல்களில் அது காணாமலே போனது.

இப்போது வேறு யாராவது தனித்தமிழ் நாட்டைப் பற்றி பேசினாலோ நாட்டு இரண்டகம் (தேசத்துரோகம்) என்று குற்றஞ்

இன்று தமிழுக்கும் இனத்திற்கும் அக்கறை செலுத்த வேண்டிய காலம் உருவாகியுள்ளது. பேராயக் கட்சியை அடுத்த கட்சிகளான பாரதீய சனதா கட்சி போன்றவை மாநிலக் கட்சிகளுடன் கைகோத்துக் கொள்ளும் காலம் உருவாகிவிட்டது. பெரும் பேராயம் மாநிலப் பேராயமாக உருமாறுகிறது.

இவர்கள் தமிழுக்கும் தமிழர் நலனுக்கும் ஏன் தமிழீழத்திற்குங் கூட ஆக்கமான பல அறிவிப்புகளைச் செய்வார்கள் என எதிர்பார்க்கலாம்.

அதே நேரத்தில் இந்தியாவை ஒருங்கிணைக்கக் கூடிய இப்போது அவர்கள் கைகொள்கின்ற கருவி வேறு. பழந்தொன்மங்களையும் மூட நம்பிக்கை – சடங்குகளையும் தன்னுள் அடக்கிய இந்து மதந்தான் அக்கருவி. இந்தியாவை 'இந்துயா' வாக மாற்றுவதே அவர்கள்பணி. மற்ற மதச் சிறுபான்மையரைவிட மிகச் சிறு பான்மையரே இதை எதிர்க்கும் இறைமறுப்பாளர்களும் பகுத்தறிவாளர்களும். இச் சிறுபான்மையினரை அவர்கள் பொருட்படுத்தத் தேவையே இருக்காது.

இந்துமதம் என்கிறபோது அன்றாடம் வீடுகளில் நடக்கும் அனைத்து மூடச் சடங்குகளும் இந்து மதத்தைச் சார்ந்தன என்று அவர்கள் உரிமை கொண்டாடி 'அர்த்த'த்தை ஆழமாகத் தொன்ம இழிகசங்களோடு கற்பித்து விடுகின்றனர். இதை ஒழிக்க எண்ணும் பகுத்தறிவாளர் இயக்கங்களும் இந்து மதக் கூறு என்றே அடையாளமிட்டு ஒழிக்க முன்வந்தனர்.

எனவே ஏதோ ஒருவகையில் சடங்காக முன் வந்திருந்தாலும் அதைச் செய்பவர்கள் இந்துக்களாகக் காட்டி விட்டதால் இன்று தமிழர்களும் இந்துக்களாக்கப் பட்டுவிட்டனர். இவ்வாறு இந்துக்களின் எண்ணிக்கை இப்போது பெரும்பான்மையாகிவிட்டது.

இன்றைக்குத் தமிழர் ஒற்றுமைக்காக ஒரு மாநாடு கூட்டுவதாக இருந்தால்கூட முற்போக்கு இயக்கங்களுக்கு மக்கள் கூடுவதினும் மதவாளர்களிடம் பெரும்பங்கு – பன்மடங்கு கூடுவர்.

அவ்வாறு மக்கள் பெருந்தொகை கூடுவதற்கு மதம் ஓர் இணைப்புக் கருவியாகிவிட்டது. இந்த இணைப்புக் கருவியைக் கொண்டு தமிழர்களின் பெரும்பான்மையோரை அவர்களுக்கு எதிரான மதவாளர்கள் ஈர்க்கமுடிகிறது.

அவர்களை மீண்டும் ஒன்றிணைக்கத் தமிழர்களுக்குப் பொதுவான ஓர் இணைப்புக் கருவியைக் காணவேண்டும்.

அவர்களின் அடிப்படை நம்பிக்கையைப் புண்படுத்தாத ஓர் இணைப்புக் கருவியைக் கண்டு அதன்வழி அவர்களை ஒன்றிணைப்பது நல்ல வழியாக இருக்கும். ◆

சென்ற இதழ்த் தொடர்ச்சி:

# மொழி உணர்வால் மீண்டெழுந்த ஓரிசா!

— கு.வெ.கி. ஆசான் —

**ஓரிசாவின் சிதைவு:**

சுமார் 235 ஆண்டுகள், ஆபுகானியர், மொகலாயர், மராத்தியர் ஆகியோரின் மேலாளுமையின் கீழ் அடுத்தடுத்து அல்லலுற்ற ஒரிய மக்கள், 1803இல் ஆங்கிலக் கிழக்கிந்தியக் குழுமத்தின் (East India Company) ஆட்சி அவர்களின் மண்ணில் ஏற்பட்டபொழுது, அவலத்திலிருந்து மீட்சி கிட்டும் என நம்பினர். ஆனால், மக்களின் விழிப்பும் ஒன்றுபட்ட முயற்சியும் இல்லாத நிலையில் எந்த ஓர் ஆட்சியும், அதுவும் அயலவர் ஆட்சி, நாட்டைச் சுரண்டி, அதை வறுமையில் வீழ்த்தவே செய்யும். இந்த உண்மையை அவர்கள் அப்பொழுது அறியவில்லை.

மக்களின் வரலாறு, பண்பாடு முதலிய அடிப்படைகளைப் பற்றிக் கவலைப்படாமல், சுரண்டலுக்கு ஏந்தான ஆள்வினைக்கு (நிருவாகத்துக்குத் தகவும், ஒரு பகுதியைக் கைப்பற்றிய பொழுது அங்கிருந்த அரசியல் நிலைமைகளுக்குத் தகவும், இந்தியத் துணைக் கண்டத்தின் மாகாணப் பிரிவுகளை ஆங்கிலேயர் உருவாக்கினர். இது மோசமான பின் விளைவுகளை ஏற்படுத்தியது. ஓரிசாவின் பெரும்பகுதி வங்காளத்துடனும், அதன் மற்றொரு பகுதி இப்பொழுது மத்தியப் பிரதேசம் எனப்படும் நடுவண் மாகாணத்துடனும், பிறிதொரு பகுதி இன்றைய ஆந்திரப் பிரதேசம் பிரிவதற்கு முன்பு இருந்த சென்னை மாகாணத்தோடும் இணைக்கப் பெற்றன. வடக்கே வங்காளம், மேற்கே இந்தி, தெற்கே தெலுங்கு ஆகிய மொழிகளைப் பேசுவோரிடையே ஒரிய மக்கள் சிறுபான்மையராக ஆக்கப்பட்டனர். ஆகையால் எங்கும் இரண்டாந்தர மக்களாகி, அயலவர் வல்லாண்மைச் சுரண்டலுடன், அயல் மொழியாரின் ஏமாற்றுக்கும் புறக்கணிப்பிற்கும் ஆளாகித் தாழ்வுற்றனர்.

## இரட்டை ஆளுமை:

ஆங்கிலேய (பிரித்தானிய) ஆளுமை 1803-இல் நேரடியாகத் தொடங்கியதும், ஒரிசாவின் முதன்மையான பெரும்பகுதி வங்காளத்துடன் இணைக்கப்பெற்றது. அதுவரை கட்டாக்கு நகரில் அமைந்திருந்த அதன் ஆட்சிப்பீடம் கல்கத்தாவில் வில்லியம் கோட்டைக்கு மாறியது. அதன் காரணமாக ஒரு பெருவிளைவு உண்டாயிற்று. ஆட்சிசெய்த ஆங்கிலேயரின் ஆளுமையுடன் இன்னொன்றும் சேர்ந்துகொண்டது. ஆள்வினைத் துறையிலும், புதிதாக அமர்த்தம் பெற்ற பெருநிலக்கிழார்கள் (ஜமீன்தார்கள்) என்ற வகையிலும் ஒரிசாவினுள் நுழைந்துவிட்ட வங்காளியரின் கூடுதல் ஆளுமை ஒரிய மக்களை மேலும் ஒடுக்கிற்று. இவ்வாறு இரட்டிப்புச் சுரண்டலுக்கு ஆளானார்களே தவிர, ஐரோப்பிய நாகரிகத்தின் தாக்கத்தால் ஏற்பட்ட புதிய கல்வி போன்ற நன்மைகளையும், அவைதரும் வாய்ப்புகளையும் ஒரியர்கள் பெற முடியாமல், அவற்றை வங்காளிய மேல்சாதியினரே தட்டிச் சென்றனர்.

அவ்வாறு நிகழ்ந்தது எங்ஙனம்? இந்தியத் துணைக் கண்டத்தில், ஆங்கிலக் கிழக்கிந்தியக் குழுமம் தனது நேரடி ஆட்சியின் கீழ்வரும் வகையில் வென்றெடுத்த முதல் நிலப்பகுதி, கல்கத்தாவை ஒட்டிய 882 சதுரக்கல் பரப்புடைய 24 பர்கானாக்கள் என்பதாகும். 1757-இல் பிளாசியிலும், 1764-இல் பச்சாரிலும் பெற்ற போர்க்கள வெற்றிகளால் ஆங்கிலேயருக்கு இந் நிலம் கிட்டியது. தொடர்ந்து கல்கத்தாவை நடுவாகக் கொண்டு அவர்களின் ஆளுமை விரிவடைந்தது. அரசு ஆள்வினை, நயன்மை, கல்வி முதலிய துறைகளில் பிரித்தானியர் ஈடுபட்டபொழுது, இயல்பாகவே வங்காள மேல்தட்டு மக்கள் அதில் பங்குபெற்று முன்னேற்றம் கண்டனர். ஒரிசாவில் ஆங்கிலேயர் ஆட்சி பரவியபொழுது, அதை நடத்துவதற்கு வங்காளியரே பெருந்துணையாக இருந்தனர்; அந்த அளவிற்குப் பயனும் பெற்றனர்.

அக் காலத்தில், நிலவரி அரசு வருமானத்தில் பெரும்பகுதியாக இருந்தது. உழுகுடிகளிடம் வரி தண்டும் அதிகாரத்தைப் பெருநிலக்கிழார்கள் பெற்றிருந்தனர். தொடக்கத்தில், நிலவரி தண்டும் பெருநிலக்கிழார்கள் (ஜமீன்தாரி) உரிமையைக் கிழக்கிந்தியக் குழுமம், ஓராண்டு, ஈராண்டு, மூன்றாண்டு இடைவெளிகளில் ஏலத்திற்கு விட்டது. இந் நிலையில், கல்கத்தாவின் வில்லியம்கோட்டையில் ஆட்சிப் பீடம் இருந்ததையும், ஆள்வினையில் வங்காளியரின் சாய்கால் நிலவியதையும் பயன்படுத்தி, ஒரிசாவின் பெருநிலக்கிழார்

களில் மூன்றில் இரண்டு பங்கினரின் இடத்தை வங்காளப் பெருநிலக்கிழார்கள் பறித்துக்கொண்டனர். இவ்வாறுதான் ஆங்கிலேயர், வங்காளியர் ஆகிய இருவரின் சுரண்டலுக்கும் ஒரிசா உள்ளாயிற்று.

## வீழ்ச்சிக்கு இடையில் விழிப்பு:

செய்தொழில் வளர்ச்சியடையாத காலக் கட்டத்தில், உழு தொழிலே பெருமளவினதாகவும் தலையாயதாகவும் இருந்தது. உழுகுடிகளில் பெரும் உடைமையாளராக இருந்தோர், குமுகாயத்தில் அதிகாரம் பெற்றவர்களாகவும் ஆட்சி மற்றும் ஆள் வினையாரிடத்தில் சார்காலுள்ளவர்களாகவும் இருந்தனர்.

அத்தகைய பெருநிலக்கிழார்களில் பெரும்பாலோர் அயல் மாகாணத்தவராக இருந்ததால், ஞாய உணர்வும் பரிவும் கொண்டவர்களாக ஒரியர்களிடம் அவர்கள் நடந்துகொள்ள வில்லை. வாணிக நோக்குடைய ஆங்கில ஆட்சியும், அதற்குத் துணையான அயல் மாநில அலுவலர்களும், தம் மக்களின் தேவைக் கேற்ப ஆள்வினை புரியவேண்டும் என்ற உணர்வின்றி நடந்து கொண்டதால், ஒரிய உழவர்கள் நிலவரிச் சுமை தாங்கமுடியாத தாயிற்று.

உழுகுடிகளைச் சார்ந்த 'பைக' எனும் உழவர்படை ஒரு காலத்தில், ஒரிசாவை ஆள்வோரின் பாதுகாப்பிற்கான முதுகெலும் பாக இருந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அங்கு ஆங்கில ஆட்சி நிறுவப்பட்டதிலிருந்து ஒரிய உழவர்கள் பெருஞ் சுமைக்கும் துன்பத்திற்கும் ஆட்பட்டதால், அவர்களைச் சார்ந்து நின்ற பைகப் படையினர் அயலவரால் புறக்கணிக்கப்பட்டுத் தொல்லைப்பட்டனர். ஆகையால், 1817-இல் அவர்கள் கிளர்ந்தெழுந்து, பூரி நகரைக் கைப்பற்றினர்; அங்கிருந்த ஆங்கில ஆட்சியர் (கலக்டர்) ஓட்டம்பிடித்தார். 1825-இல் பைகப் படையினரின் தலைவர் பச்சி சகபந்து விந்தியாதரன் என்பவர் அடைக்கலம்புக நேர்ந்தாலும், 1833, 1847 ஆகிய ஆண்டுகளில் மீண்டும் கிளர்ச்சிகள் வெடித்தன. 1857-இல் நடந்த படைஞர் பெருங்கலகத்தின் பொழுது ஒரிசாவின் சம்பல்பூரைச் சேர்ந்த சுரேந்திரசாயி என்பவரின் தலைமையில் அப்பகுதியினர் கிளர்ச்சி யில் பங்குபெற்று ஆங்கிலேயரை விரட்ட முயன்று தோற்றனர்.

இதற்கிடையில், ஒரிசாவின் மீது அயலவர் வல்லாண்மையின் பிடி இறுக்கமாயிற்று. ஒரியர்களின் குறைகளையும் தேவைகளையும்

எடுத்துக் கூறுவதற்கான, புதிய முறையில் ஆங்கிலக் கல்வியைப் பெற்ற ஆள்வினையாளர்களோ, எழுத்தாளர்களோ, வழக்குரைஞர் களோ, இன்ன பிறரோ அவரிடையே இல்லாமற்போயினர். 1844 வாக்கில் ஆங்கிலம் அங்கு ஆட்சி மொழியாயிற்று. அதில் பங்குபெற அம் மொழிவழிக் கல்வி வேண்டப்பட்டது. கல்கத்தாவில் 18-ஆம் நூற்றாண்டின் கடைக்காலத்திலிருந்தே ஆங்கில அறிவு தரும் பள்ளிகளும் கல்லூரிகளும் தொடங்கப்பெற்றன. ஆனால், 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில்கூட, ஒரிசா ஆள்வினைப் பகுதிக்குத் தலைமையிடமாக விளங்கிய கட்டாக்கில் இருந்த ஓர் உயர்நிலைப் பள்ளியைத் தவிர வேறு புதியமுறைக் கல்விக்கூடங்கள் அந் நிலத்தில் இல்லை. அதிலும் மேல்மட்ட ஆசிரியர்களாகப் பிற மாநிலத்தவரே யிருந்தனர். ஆகையால் அங்கும் ஒரிய மக்கள் இரண்டாந்தர நிலையில் நடத்தப்பெற்றனர்.

இந் நிலையில், எல்லாத் துறைகளிலும் ஒரிசாவின் தேவைகளும் குறைகளும் கவனிக்கப்படாமல் இருந்ததால், அந் நில மக்கள் வறுமைக்குள்ளாயினர். 1866-இல் அங்கு ஏற்பட்ட பெரும் பஞ்சத்தில் பத்து இலக்கம் பேருக்கும் அதிகமாக மாண்டனர். அதுவரை பாராமுகமாக இருந்த பிரித்தானிய இந்திய ஆள்வினையாளர்கள் பஞ்சத்திற்கான காரணத்தை உசாவி ஆய்வுமேற்கொண்டனர். வங்கம், நடுவண் மாநிலம், சென்னை ஆகிய வெவ்வேறு மாகாணங் களோடு. மூன்றாகச் சிதைக்கப்பட்ட ஒரிசாவின் பிரிவுகள் சேர்க்கப் பட்டிருந்தமை மூலகாரணம் என அறியப்பட்டது. மூன்று ஆள்வினைப் பிரிவினரும் ஒரியர் வாழும் பகுதிகளைப் புறக்கணித்தே வந்தனர்! அப்பொழுது இலண்டனில் இந்திய அமைச்சராக (Secretary of State for India) இருந்த வயவர் தாபோர்டு நார்த்துகோட்டு (Sir Stafford Northcotte) என்பவர் இக் காரணத்தை அறிந்தார். இந்த மூலக் குறையைக் களைவதற்கு, மூன்றாகப் பிளவுபட்டிருந்த ஒரிசாவின் பகுதிகள் அனைத்தையும் ஒன்றாக்கி, ஒரிய மொழி அடிப்படையில், தனி மாநிலத்தை அமைக்கவேண்டுமென 1868-இல் பரிந்துரைத்தார். ஓர் இனத்தின் மொழியினடிப்படையில் அமையும் மாநில ஆட்சியே அவர்களின் உணர்வுகளை மதித்து, தேவைகளை அறிந்து செயல்பட முடியும். இந்தியத் துணைக் கண்டத்தைப் பொறுத்தவரை இந்த அடிப்படைக் கருத்தை வெளியிட்ட முதல் ஆங்கில உயர் ஆட்சியாளர் அவராகத்தான் இருக்கக்கூடும்.

உரிமைகளையும் ஞாயங்களையும் வென்றெடுக்கவேண்டும்; உண்மைகளை நிலைநாட்டவேண்டும்; அவை தாமாக வெற்றி

பெறுவதில்லை; முயற்சி செய்து மக்கள் அவற்றைத் தமவாக்கிக் கொள்ள வேண்டும். மொழிவழி அமைந்த தனி மாநிலமே ஓரியர் களுக்கு விடிவைத் தரும் எனும் உண்மையை ஆட்சி நடத்தியவர் உரைத்தார் எனினும், அதை முயன்று பெறுவதற்கான விழிப்பும், ஒன்று திரண்ட ஆற்றலும், தொடர்ந்து நடத்திச்செல்லும் தலைமையும் ஒரிய மக்களிடையே அக்காலத்தில் இல்லாமற் போயின.

ஓரியரின் இந்த நெருக்கடியான வீழ்ந்துபட்ட சூழ்நிலையைப் பயன்படுத்தி, அவர்களின் தனித் தன்மையையே போக்கடிக்கும் முயற்சியில் வங்காள மேல்மட்டத்தார் (elite) இறங்கினர். வயவர் தாபோர்டு நார்த்துகோட்டு பரிந்துரைத்தபடி ஒரிசா தனிமாநிலமாக அமைந்தால், தமது மேலாண்மை வாய்ப்புகள் பறிபோகுமென அவர்கள் பதறினர்; அவ்வாறு அமைவதைத் தடுக்கத் துணிந்தனர். ஆள்வினையிலும் கல்வியிலும் ஒரிய மொழிக்கு இடமளிக்கத் தேவை யில்லை யென்றனர். வங்கமொழியினின்றும் ஒரியா வேறுபட்டதன்று என்றும், அதனுடைய ஒரு வட்டார வழக்கே (dialeet) அஃது என்றும் காரணம் காட்டினர்.

ஆனால் தமது மொழியின்பால் பற்றுக்கொண்டிருந்த ஒரியர் கள், அதன் வழியாகத் தங்களுடைய தனித் தன்மையைத் தக்க வைப்பதில் உறுதியோடிருந்தனர். அம் மொழியில் புலமை பெற்றவர் கள் அதன் தனிச்சிறப்பையும், வெவ்வேறு காலக் கட்டங்களில் நிகழ்ந்த அதன் இலக்கிய வளர்ச்சியையும் வளத்தையும் நிறுவினர். சாய்கால் மிக்க ஆங்கில ஆள்வினையாளர்கள் இருவர், புலவர்களின் மொழிக் காப்பு முயற்சிக்குப் பெருந்துணையாயினர். பலசூர் (Balasore) மாவட்ட ஆட்சியராகவும், இந்திய - ஆரிய மொழிகளின் ஒப்பிலக்கணம் எனும் நூலை எழுதியவராகவும் திகழ்ந்த சான் பீம்சு (John Beams) என்பார் அவர்களில் ஒருவர். மற்றவர், ஒரிசா ஆள்வினைப் பிரிவின் (Administrative Division) ஆணையரான இரேவன்சா என்பவர். 1868-இல் 'உத்தல் உல்லாசினி சபை' யைத் தோற்றுவித்தும், 1866-இல் தோன்றிய கிழமை இதழான 'உத்தல் தீபிகா' -வில் எழுதியும் மொழிக்காப்பு நடவடிக்கைகளை 1880 வரை, ஏறத்தாழ 12 ஆண்டுகள், தொடர்ந்து மேற்கொண்டு ஒரிய மொழிக்குச் சார்பாக வெற்றிபெற்று, அதன் தனித் தன்மையைப் பேண வேண்டியதன் தேவையை நிலைநாட்டினர்.

அகோம் குடிமரபினர் ஆட்சி முடிவுற்ற பின்பு, 1826-இல்

அசாம் வங்காளத்துடன் இணைக்கப்பட்டதைப் பயன்படுத்தி, அசாமிய மொழியையும் பண்பாட்டுத் தனித் தன்மையையும் அழித்து. அசாமியரைத் தங்களுக்குக் கீழ்ப்படிந்தவராக ஆக்கும் முயற்சியில், ஆங்கில ஆட்சியின் துணையுடன், வங்காளிய மேல்மட்டத்தார் ஈடுபட்டனர். அமெரிக்கச் சமய ஊழியரின் ஆக்கத்தால் தோன்றிய 'ஓரந்தாய்' (Orondoi) எனும் இதழின் வழியாகப் போராடி அசாமிய மொழியின் உரிமை நிலைநாட்டப்பெற்றது எனும் வரலாறு, ஒரிசாவின் வரலாற்றுடன் இவ் வகையில் ஒப்பு நோக்கத் தக்கதாக இருக்கிறது.

ஓர் இனம் தன்னை அடையாளப்படுத்திக்கொள்ளவும், முகவரி யற்றுத் தாழ்ந்து பிறரைச் சார்ந்து வாழ்வதைத் தடுக்கவும், ஒற்றுமையை நிலைப்படுத்தவும், மரபுகளின் செழுங்கூறுகளையும் பண்பாட்டுத் தனித்தன்மையையும் காத்துவளர்த்து வளப்படுத்தி முன்னேறவும் முதன்மையான உயிர்க் கருவியாக அவ் வினத்தின் மொழி திகழ்கிறது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் தங்கள் மொழிக்கும் பண்பாட்டிற்கும் நேரவிருந்த அழிவைத் தடுத்துக் காத்த ஒரிய, அசாமிய வரலாறு இவ் வுண்மைக்குச் சான்று பகர்கின்றது. தந்தை பெரியார் அவர்களின் கருத்து ஒன்று இது தொடர்பாக நினைவு கூரத்தக்கதாக இருக்கிறது: “மொழி வளர்ச்சி இல்லாதவர் களுக்கு நாட்டு வளர்ச்சியோ, நாட்டு நினைவோ எப்படிவரும்? நம் பிற்காலப் பிறங்கடையினருக்காவது சிறிது நாட்டு உணர்ச்சி ஏற்படும்படி செய்யவேண்டுமானாலும் மொழி வளர்ச்சி சிறிதாவது இருந்தால்தான் முடியும். அன்றியும், குமுகாய இனவுணர்ச்சி சிறிதாவது இருக்கவேண்டுமானாலும் மொழியுணர்ச்சி இருந்தால் தான் முடியும்.” *(விடுதலை — 25.7.1972)*

மொழிப் புலவர்கள், மற்றும் இக்கால வரலாற்றுப் போக்கினை அறிந்த சிலர் ஆகியோர் மட்டுமே, 19-ஆம் நூற்றாண்டின் இறுதிக் காலக்கட்டத்தில், ஒரிய தேசிய இனத்தின் உரிமையைப் பேணி முன்னேற்றமடையத் தனி மாநிலம் தேவை என்பதை உணர்ந் திருந்தனர். அது பொதுமக்களின் கோரிக்கையாக வலுப்பெற்றிருக்க வில்லை. ஆகையாற்றான், 1868-இல் இங்கிலாந்து நாட்டின் இந்திய அமைச்சர் ஒரிசா மாநிலம் மொழியினடிப்படையில் அமைய வேண்டுமெனப் பரிந்துரைத்தும், அது நடைமுறைக்கு வரவில்லை. அனைத்து வகையினரிடையேயும் விழிப்புணர்வை உண்டாக்கி, அக் கோரிக்கையைப் பொதுமக்களின் இயக்கமாக ஆக்கிய பின்புதான்,

அதைச் செயல்படுத்துவதில் ஆட்சியாளர்கள் கவனம் செலுத்தினர். அதன் விளைவாக 1936-இல் ஒரிசா மாநிலம் அமைக்கப்பெற்றது.

**புதிய ஓரிசாவின் தந்தை:**

ஆங்கில மேலாண்மைக் காலத்தில் வங்க மாநிலம் (Presidency), சென்னை மாநிலம், நடுவ மாகாணங்கள் (Central Provinces) ஆகிய மூன்று அரசமைப்புகளின் கீழ்ப் பிரித்தாளப்பட்ட ஒரிய மக்களின் நிலப்பகுதிகளை ஒன்றுதிரட்டி, இக்கால ஒரிசாவை உருவாக்கிய பெருமை, முகாமையாக மதுசூதன்தாசு *(1848–1934)* எனும் பெருமகனாரைச் சாரும்.

ஒரிய இனத்தின் முதற் பட்டந்தாங்கி, முதல் முதுநிலைப் பட்ட பெற்றவர், சட்டத்தில் பட்டம் பெற்று வழக்கறிஞரான முதல் ஒரியர், மாகாணச் சட்ட மன்றத்தில் முதல் ஒரிய இன உறுப்பினர், நடுவச் சட்டமன்றத்தில் அதே பெருமையைப் பெற்றவர், இக்கால வரலாற்றில் கடல்கடந்து அயல்நாடு சென்ற முதல் ஒரியாக்காரர், தம்முடைய வளர்ப்பு மகள் சுதன்சுபாலா என்பவரை, எதிர்ப்புகளையும் தடைகளையும் முறியடித்து, இந்தியாவிலேயே முதல் பெண் வழக்குரைஞர் ஆக்கியவர், தமது நாட்டின் தொன்மையான கைவினைத் தொழிலைப் புதுப்பிக்க 'ஒரிசா கலைப் பண்டங்கள்' எனும் தொழில் நிறுவனத்தைத் தொடங்கி நடத்தியவர், நிலக்கிழார் குடும்பத்தில் பிறந்தவராயினும், நாற்றமெடுத்ததென அக் காலத்தில் ஒதுக்கப்பட்ட தோல் பதனிடுதலையும் அதைக் கொண்டு அணிகளைச் செய்வதையும் புதிய தொழில் நுட்ப அடிப்படையில் மேற்கொண்டு பன்னாட்டு அளவில் தரத்தை நிலை நாட்டியவர், உள்ளாட்சி அமைச்சராக இருந்தபொழுது *(1921–23)* அத் துறை அமைப்புகளில் ஒடுக்கப்பட்ட சாதியாருக்கு இடஒதுக்கீடு அளித்த குமுக நயன்மையாளர், பெண்கல்விக்கும் உரிமைக்கும் உழைத்தவர், இந்தியத் தேசியப் பேராயக் கட்சியின் வளர்ச்சிக்கு அதன் தொடக்கக் காலத்தில் 17 ஆண்டுகள் உழைத்தவர்எனும் வகையில் செயல் வெற்றிகளைக் குவித்தவர் மதுசூதன்தாசு. தம் திறமைகள், தமக்குக் கிட்டிய பெருமை, சாய்கால் ஆகிய அனைத்தையும் ஒரிய தேசிய இனத்தின் சிதறிக் கிடந்த தாயகத்தை ஒன்றுதிரட்டிப் புதிய ஒரிசாவை உருவாக்க அவர் பயன்படுத்தினார். இலக்கை எட்டுவதற்குத் தமது செல்வம், சாய்கால் முதலிய அனைத்தையும் ஈடுபடுத்தி ஓயாது பாடுபட்ட அவருடைய ஈக வாழ்வு மன எழுச்சியூட்டக் கூடியதாகும். ❒

பத்தவச்சலத்துக்கு நினைவுமண்டபம்
கட்டும் முயற்சியைக் கைவிடுக!

# மொழிப்போர் வீரர்கட்கு நினைவகம் எழுப்புக!

## பத்தவச்சலம் நினைவுமண்டப எதிர்ப்புக்குழு முதலமைச்சர் கலைஞர்க்கு வேண்டுகோள்!

*சென்னை, சன. 24*

"தமிழ்நாட்டரசு மேனாள் முதலமைச்சர் பத்தவச்சலத்துக்கு நினைவுமண்டபம் எழுப்பும் முயற்சியைக் கைவிடுவதோடு, மொழிப்போர் வீரர்கட்கு நினைவகம் எழுப்புதலும் வேண்டும்" என்று பத்தவச்சலம் நினைவு மண்டப எதிர்ப்புக் குழுவினர், முதலமைச்சர் கலைஞர்க்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது தொடர்பான கடிதவிளக்கம் வருமாறு:

"மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு, வணக்கம்!

மேனாள் முதலமைச்சர் பத்தவச்சலத்தின் பெயரில், தமிழ் நாட்டரசு சென்னை–கிண்டியில் முப்பது இலக்கம் உருவா செலவில் நினைவு மண்டபம் எழுப்பிவருவதாக அறிகிறோம்.

திரு. பத்தவச்சலம் 1965 இல் இந்தியின் வல்லாண்மையை எதிர்த்து ஒட்டுமொத்தத் தமிழகமும் கிளர்ந்தெழுந்தபோது, அப் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களையும் பொதுமக்களையும் கொஞ்சமும் ஈவு இரக்கமில்லாமல், கண்மூடித்தனமாக நூற்றுக் கணக்கில் சுட்டுக் கொன்றவர்; பற்பலர் தற்கொலை செய்து கொள்வதற்கும் காரணமாக நின்றவர். அவ்வாறு இறந்தவர்களை ஏளனம் பேசி, தமிழர்களையே இழிவுபடுத்தியவர். தமிழ்மக்களின் உணர்வைத் தில்லியரசுக்கு எடுத்துரைத்து உரிமைக்குரல் எழுப்பு வதற்கு மாறாகத் தமிழுணர்வினரைத் தம் இரும்புக் கையால் அடக்கி நசுக்கியவர்.

தமிழ்நாட்டின் வரலாற்றில் பத்தவச்சலம் புரிந்த கொடுஞ்செயல் தொலையாக் களங்கமாக நிலைபெற்றிருக்கிறது. அவருடைய பெயர் தமிழ்ப்பகையின் நிலையான அடையாளம்!

பத்தவச்சலம் நல்லருஞ்செயல் புரிந்த பெருமைக்குரியவரோ, மற்றவர்கள் பின்பற்றத்தக்க முன்னோடியோ அல்லர். இந்திய விடுதலைப் போராட்டத்தில் அவர் ஈடுபட்டதற்கு விலையாக அவர் பெற்றுத் துய்த்த பதவி நலங்கள் ஏராளம்!

தமிழ்நாட்டரசு, மக்கட் பணத்தைச் செலவிட்டுப் பத்தவச்சலத்திற்கு நினைவு மண்டபம் எழுப்புவது, தம் இறுதிமூச்சு இழையோடுகின்ற போதும் 'தமிழ் வாழ்க!' என்று முழங்கி உயிர்துறந்த ஈகத் தமிழ் மறவர்களுக்கு இழைக்கும் இரண்டகம்! தமிழுணர்வாளர்கள் மீதான அவமானம்!

இது தொடர்பாக, பத்தவச்சலம் நினைவு மண்டப எதிர்ப்புக் குழு தனது கண்டனத்தை 27.12.97 அன்று ஒலிமுழக்கப் போராட்டத்தின் வழி வெளிப்படுத்தியுள்ளது.

ஆதலால் தமிழ்நாட்டரசு, பத்தவச்சலம் நினைவு மண்டபம் எழுப்பும் இம்முயற்சியைக் கைவிடுவதோடு, மொழிப்போர் வீரர்களுக்கு நினைவு மண்டபம் எழுப்புதல் வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கின்றோம். நன்றி!

— இவ்வாறு அக் கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

கடிதத்தில் குழுவின் அமைப்பாளரும் தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சியின் பொதுச் செயலாளருமான பெ. மணியரசன், குழுவின் பொருளாளரும் தென்மொழி அவைய அமைப்பாளருமான திருக்குறள்மணி புலவர் இறைக்குருவனார், தியாகு (தமிழ் தமிழர் இயக்கம்), கி.த. பச்சையப்பன் (தமிழியக்கம்; தமிழுரிமைக் கூட்டமைப்பு), கோ.வி. நடராசன் (அம்பத்தூர்த் தமிழ் இலக்கியப் பேரவை), வே. ஆனைமுத்து (மார்க்சிய–பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி), தமிழ்மகன் (தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கம்) ஆகியோர் கையொப்பமிட்டுள்ளனர்.

---

## அன்பர்களுக்கு ஒரு வேண்டுகோள்!

இன்றைய நிலையில் 'தென்மொழி' இதழ் விற்பனைக் கணக்கிலும், தென்மொழி நாள்காட்டி, நூல்கள், மலர்க் கணக்கு நிலைகளிலும் தென்மொழி அன்பர்களும் முகவர்களாக இருப்பவர்களும் பெருமளவில் பட்டியல் தொகைகளை நிலுவையாக வைத்திருக்கிறார்கள். அவ்வன்பர்களுக்குப் பலமுறை நினைவூட்டு மடல்கள் விடுத்தும் அமைவாகவே இருக்கின்றார்கள். தென்மொழியின் தொடர்ச்சியான வெளியீடு, நூறாசிரியம் வெளியீடு, ஐயா அவர்களின் நினைவு மலர் வெளியீடு ஆகிய தவிர்க்க இயலாத இவற்றால் மிகவும் பொருளியல் சிக்கலாக இருக்கும் இந்நிலையில் தொகை விடுத்து வைத்தால் மிகவும் பயனுடையதாக இருக்கும் என்பதைத் தென்மொழி அன்பர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம். ஆதலின், அன்பர்கள் நிலுவைத் தொகைகளை விடுத்துவைத்து அடுத்து வருகின்ற முயற்சிகளுக்குப் பெரிதும் துணை நிற்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

– அமைச்சர், தென்மொழி

---

## நூல் அறிமுகம்

● **தமிழ்ஈழப் போர்ப் பரணி**

*ஆசிரியர்: உணர்ச்சிப் பாவலர்* ***சிங்காரவேலன்,*** *2, காவேரி சாலை, தேவதானம், திருச்சி – 620 002. விலை : உரு. 10.00*

*தமிழ் ஈழம் குறித்த போர்ப்பரணிப் பாடல் நூல். பாவலரின் உணர்ச்சி வரிகளில்...*

● **பாவலர் நெஞ்சில் பேராசிரியர்**

*தொகுப்பாசிரியர்கள்: முனைவர்* ***கடவூர் மணிமாறன்,*** *முனைவர்* ***கருவூர் கன்னல்,*** *விடியல் வெளியீட்டகம்–109, மேலைத் தெரு, கிருட்டிணராயபுரம் – 639 102, கரூர் வட்டம். விலை : உரு. 20.00.*

*"எழுபத்தாறு அகவை இளைஞராம் பேராசிரியர் க. அன்பழகன் அவர்களை எழுபத்தாறு பாவலர்கள் உளமார வாழ்த்தி உவகை அடைகின்றனர்."*

● **நீதியின் காவலர் நீதிபதி நீலமேகம்**

*ஆசிரியர்: முனைவர் திருக்குறள்* ***சி. இராமக்கிருட்டிணன்*** *(மேனாள் நடுவர்), கரிகாலன் பதிப்பகம், 16, காரணீசுவரர் கோயில் முதல் வீதி, மயிலார்ப்பூர், சென்னை – 600 004. விலை: உரு. 75.00.*

*"ஒரு நாட்டின் ஆட்சிப் பீடத்தில் உயர்ந்த இடத்தில் இருப்பவரிலிருந்து அடித்தட்டிலே வாழும் இயல்பான குடிமகன் வரையிலும் நடுவர் ஒருவர் என்கிற முறையில் எத்தகைய பண்புடனும், கட்டுப்பாட்டுடனும், வரைமுறையுடனும் பழகலாம் என்பதற்கு நடுவர் நீலமேகம் சிறந்த சான்றாளராக உள்ளதைக் காட்டும் புதினம் இது..."*

### தமிழ் நாள்காட்டிகள்

● **திருவள்ளுவர் நாள்காட்டி.** *வெளியீடு: உலகத் தமிழ்க் கழகம். நெய்வேலி 607 803. கிடைக்குமிடம்: வெ. அருளின்பன் பி.4, சந்தன மரத் தெரு, நகர்க்கூறு–9, நெய்வேலி–607 801. விலை : உரு. 10.00.*

*கடந்த 22 ஆண்டுகளாகத் தொடர்ந்து பழந்தமிழ் எண்களில் வெளியிடப்படும் நாள்காட்டி. குறிப்புகளும், கருத்துகளும் கொண்ட சிறப்புடையது.*

● **திருவள்ளுவர் காலந்தேர்.**

*வெளியீடு : கோ.செ.இரா. சுப்பிரமணியம் திருமண மண்டபம், 9/92 அம்மாபாளையம், அனுப்பர்பாளையம் 641 652, திருப்பூர். விலை : உரு. 15.00.*

*பழந்தமிழ் எண்கள் பயன்படுத்தப் பெற்றிருந்தாலும், மாதப் பெயர்களும் கிழமைப்பெயர்களும் தமிழில் இல்லாத குறையுடைய தாயினும் பிற குறிப்புகளுடைய சிறப்பு வெளியீடு.*

வெளிவந்துவிட்டது!

பாவலரேறு ஐயா அவர்களின்

# கற்பனை ஊற்று

- உரைப்பா நடையில் அமைந்த தூய தமிழ்நூல்.
- “மெய்யறிவும், கற்பனை யாழமும், கலையழகும், பொருள் நுட்பமும், சொற்செறிவும் மிகுந்த கட்டுரைகள்!”
- நல்லெழிலார்ந்த பல்வண்ண முகப்புடன் கூடிய செம்மையான கட்டமைப்பு!



- முன்னைப் பதிப்பில் இடம் பெற்றனவும், பின்னைத் தென்மொழியில் வெளிவந்தனவும், கையெழுத்து வடிவில் இருந்ததும் ஆகிய அனைத்துக் கட்டுரைகளும் அடங்கிய முழுமையான பதிப்பு.

விலை : உரு. 40.00

பதிவஞ்சலில் பெற உரு. 55 அனுப்புக!

தென்மொழி நூல்வெளியீட்டு விற்பனையகம்
5, அருணாசலத்தெரு, சென்னை – 600 005.